Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்--12

பொதுசன நூலகம்

2004



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10149) T.P: 024-222 4247

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-03 | 19-09-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -214

# அரசியல்வாதிகள் நடத்திய யுத்தத்தினால் அழிவைத்தவிர பயன் எதுவும் கிட்டவில்லை

## தென்னிலங்கை ஊடகவியலாளர் மத்தியில் சு.ப தமிழ்ச்செல்வன் வலியுறுத்து



(அலுவலக செய்தியாளர்)

இந்த நாட்டிலே யுத்தத்தைத் திணித்ததன் மூலம் பெரும் அழிவுகளையும், அவலங்களையும் ஏற்படுத்தியதைத் தவிர அரசியல்வாதிகள் வேறு ஒன்றும் சாதிக்கவில்லை என்பதை எங்களது இந்தப் பிரதேசங்களுக்குள் சுற்றிவந்தபொழுது தெளிவாகப் புரிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன் என அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று தம்மைச் சந்தித்த தென்னிலங்கை ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

தென்னிலங்கை ஊடகவியலாளர் 38பேர் யாழ்ப்பாணம் சென்று அப்பகுதி நிலைமைகளைப் பார்வையிட்டுத் திரும்பிய பின் அவர்கள். மத்தியில் அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில் தமிழ் மக்களோ, தமிழீழ விடுதலைப்புலிகளோ, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரோ சிங்கள மக்களுக்கோ அல்லது சிங்கள தேசத்திற்கோ விரோதமான அல்லது எதிரான போக்குக கொண்டவர்கள் அல்ல. அதை நீங்கள் சிங்கள மக்களுக்குத் தெளிவாக எடுத்துச்சொல்ல வேண்டும். ஏனெனில் சிங்கள மக்கள் மத்தியில் தவறான

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறில.படைத்தரப்பின் புலனாய்வுப் பிரிவை மீளக் கட்டியெழுப்ப தீவிர நடவடிக்கை!

## இராணுவ,பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் இணைப்பு

**படைத்தரப்பின் புலனாய்வுப் பிரிவினை மீளக்கட்டியெழுப்பும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் முதல்கட்டமாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவு,இராணுவப் புலனாய்வுப் பிரிவு என்பன ஒரே குடையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இதனடிப்படையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பிரிகேடியர் கபிலஹெந்தவிதாரணவின் கீழ் அனைத்து சிறிலங்கா புலனாய்வு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவிருப்பதாக அறிவிக்கப்படுள்ளது.**

சிறிலங்காப் படைகளின் அதிகாரியாக பதவி ஏற்றுள்ள தயா சந்தகிரியின் ஆலோசனையின் பேரிலேயே இந்த மாற்றம் கொண்டுவரப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை புலனாய்வு அதிகாரிகளின் உயர் மட்ட மாநாடு ஒன்று நடத்தப்படவிருப்தாகவும், இதனைத் தொடர்ந்து இந்த புதிய நடைமுறை குறித்த உத்தியோக பூர்வ அறிவித்தல் வெளியிடப்படுமென்றும் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஊடுருவி பல தாக்குதல்களை மேற்கொண்ட புலனாய்வுப் பிரிவின் மிக முக்கியமான அணியான நீண்டதூரம் ஊடுரு வித்தாக்கும் அணி தற் போது முற்றாகச் செயலிழந்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வீரவணக்கக் கூட்டமும் நடுகல் திரைநீக்கமும்

02.12.95 அன்று யாழ். ஸ்ரான்லி வீதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்ரினன்ட் நாதன் (முத்துக்குமாரசாமி.சசிக்குமார், புங்குடுதீவு, யாழ்ப்பாணம். தற்காலிக முகவரி:- 2ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு) என்பவரின் திருவுருவப்படம் இன்று காலை 9.00மணிக்கு அவரது தற்காலிக

(12 ஆம் பக்கம் பார்க்க)

### திருத்தம்

கடந்த 16ஆம் திகதி பளைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சாவடைந்த மாவீரர் கப்டன் இளங்கோவனின் தந்தையார் பெயர் சுப்பையா என்பதே சரியானதாகும்.

# திருமலையில் புலிகளின் முகாம்களை அகற்ற புலிகளிடம் பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை

திருகோணமலையில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாம்களை அகற்றுமாறு சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக கொழும்புத் தகவலொன்று தெரிவிக்கின்றது.

சம்பூர் பகுதியிலும் திருகோணமலை துறைமுகத்தை சூழவுள்ள இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் பாதுகாப்பு அரண்கள் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுத்து வருவதாக இராணுவத் தரப்புக் கருதுவதாகவும் இந்த விடயம் குறித்து இராணுவத் தரப்பு தேசிய பாதுகாப்பு ஆணைக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இதனையடுத்தே பாது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி. முக்கிய உறுப்பினர் புத்தளத்தில் சுட்டுக்கொலை



ஈ.பி.டி.பி.யின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும், சிரேஷ்ட உறுப்பினருமான பவான் எனப்படும் தம்பித்துரை சிவகுமார் (வயது 41) என்பவர் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் இனந்தெரியாதோரினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தில்லையடியிலுள்ள கட்சி அலுவலகத்திலிருந்து துவிச்சக்கர வண்டியில் அருகாமையிலுள்ள வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த சமயம் உந்துருளியில் வந்த இருவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். கடந்த பொதுத்தேர்தலில் யாழ் மாவட்டத்தில் ஈ.பி.டி.பி. வேட்பாளராகப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீள அமைக்க நடவடிக்கை எடுக்குக

## மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கோரிக்கை

(வடமராட்சி)

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் அழிவுற்றுள்ள அச்சுவேலி கைத்தொழில் பேட்டையினை மீள இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல தரப்புகளும் கோரிக்கை விடுத்துள்ளன. இது தொடர்பாக நேற்று 2 ஆம் நாளாக யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் வலியுறுத்தியுள்ளன. இக் கைத்தொழில் பேட்டையினை மீள இயக்குவதன் மூலம் குடாநாட்டில் நிலவிவரும் வேலையில்லாப் பிரச்சினையை ஓரளவிற்கு(12 ஆம் பக்கம் பார்க்க)

நான் என் உயிரிலும்மேலாக நேசிக்கும் உங்களிடம்
ஒருபெரும் பொறுப்பை விட்டுச்செல்கின்றேன்.
நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிழர்ந்தெழவேண்டும்.
இங்கு ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.

தியாகி லெப்.கேணல் திலீபன்



### உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு

# சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியினால் கடனடிப்படையில் 72 உழவு இயந்திரங்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களை வளப்படுத்தும் நோக்கில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியினால் 72 உழவு இயந்திரங்கள் கடனடிப்படையில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.

சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி முகாமையாளர், சிறிஸ்கந்தராசா தலைமையில் வங்கியின் முன்வளாகத்தில் நேற்றுப் பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை கொழும்பு தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் சந்துரு பரராஜசிங்கம், லண்டன் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் செல்வரத்தினம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தலைமையுரையினையடுத்து கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களும், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி அவர்களும் உரை நிகழ்த்தியதுடன், முறையே பூநகரி அபிவிருத்தி நிறுவனம் பாண்டியன்குளம் அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றிற்கான உழவு இயந்திரத்தினையும்,அவற்றிற்கான உரிமப்பத்திரங்களையும் வழங்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து மற்றைய உழவு இயந்திரங்களும் அதற்கான உரிமப்பத்திரங்களும் மற்றைய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டன. (சோ)

## வட்டக்கச்சி கட்சன் வீதிச்சந்திப்பகுதியில் வேகக்கட்டுப்பாட்டு சமிக்ஞை இடக்கோரல்

வட்டக்கச்சி கட்சன் வீதிப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டு சமிக்ஞை (அடையாளம்) இட வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகின்றது. கட்சன் வீதிச்சந்தி நாற்சந்தியாகவுள்ளதுடன், வட்டக்கச்சி மகாவித்தியாலயமும், அருகே கிறிஸ்தவ தேவாலயமும், எதிரே வியாபார நிலையங்களும் காணப்படுவதனால் இது மக்கள்நடமாட்டம் அதிகமுள்ள பகுதியாகவுள்ளது. இதனால் வீதி விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன. வட்டக்கச்சி மகாவித்தியாலத்தில் தொளாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இப் பாடசாலையில் தரம் 01முதல் 12 வரையிலான வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

மற்றும் பஸ் தரிப்பிடம் முற்றாக இன்மையினால் பயணிகள் மரத்தின் கீழ் நின்று பேருந்தை மறிப்பதற்கு வேகமாக ஓடுவதனாலும் சிறு விபத்துக்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.எனவே இதனைக் கவனத்திற்கொண்டு கட்சன் வீதிச் சந்திக்கு வேகக்கட்டுப்பாட்டு சமிஞ்சை இடும் வண்ணம் மக்கள் கேட்டுள்ளனர். (12)

# யாழ். மருத்துவ பீட மாணவியின் போராட்டம் நேற்றுக் கைவிடப்பட்டது

(வடமராட்சி)

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்திற்கெதிராக மருத்துவபீட மாணவி செல்வி.கி.புஸ்பமாலா மேற்கொண்டு வந்த போராட்டத்தினை கைவிட்டுள்ளார். அத்துடன் பல்கலைக்கழக வளாகத்தினிலிருந்து நேற்றுக் காலை 9.00 மணியுடன் அவர் வெளியேறியுமுள்ளார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரின் ஏற்பாட்டினில் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் அவர்களிற்கும் குறித்த மாணவிக்குமிடையே இடம் பெற்ற பேச்சுக்களையடுத்து சுமுக நிலை ஏற்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் க.சிவச்சந்திரன் மற்றும் மாணவர் பேரவையின் இணைப்பாளர் கண்ணன், குகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மருத்துவபீட மாணவியான தான் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் பழிவாங்கப்பட்டதாகக் கூறி குறித்த மாணவி பல்கலைக்கழக வளாகத்தில் தொடர்ச்சியாகத் தங்கியிருந்து எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தி வந்திருந்தார்.

எனினும் மாணவிக்கு உறுதியளிக்கப்பட்டபடி அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு விட்டதாகவும், அடாத்தாக அவர் பல்கலைக்கழக வளாகத்தினுள் தங்கியிருந்தால் பலவந்தமாக அவரை வெளியேற்ற வேண்டியதோர் சூழல் ஏற்படலாமெனவும் துணைவேந்தர் அறிவிப்பொன்றினை விடுத்திருந்தார்.

ஆயினும் நான் பலவந்தமாக வெளியேற்றப்பட்டால், தற்கொலை செய்து கொள்ளப் போவதாகக் குறித்த மாணவி துணைவேந்தருக்குக் கடிதம் மூலம் அறிவித்ததையடுத்து பதற்றமானதோர் சூழல் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## மட்டுவில் நாடு அ.த.க பாடசாலை சொந்த இடத்தில் இயங்கும்

(பூநகரி)

வலம்புரி இராணுவ நடவடிக்கையின் பின் முற்றாக அழிக்கப்பட்ட மட்டுவில் நாடு அ.த.க பாடசாலை மீண்டும் சொந்த இடத்திலே இம் மாத முடிவுக்குள் ஆரம்பிக்கப்படலாமென கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். இப் பாடசாலைக்கு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளர். இவர் இப்பகுதி கிராம சேவையாளருடனும் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்துடனும் தொடர்பு கொண்டு திறப்பு விழா ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளைமேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (34)

## போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக மன்னாரில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

போதைப்பொருள் தடுப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியக் கல்லூரியில் காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது.

இதற்கு மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவினர் அனுசரணை வழங்கினர். கொழும்பு போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி உட்பட பலர்கலந்துகொண்டு, போதைப்பொருள் மன்னாரில் மிக மோசமாக பழக்கத்திற்கு வந்துள்ளது எனச்சுட்டிக்காட்டியதுடன், இதனைக் கட்டுப்படுத்துவதற்குக் கூடிய வழிமுறைகளைப் பின்பற்ற போதிய விளக்கமளித்தனர்.

இந்நிகழ்வில் கிராம அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (மி)

## முல்லை மாவட்ட சிறார்களுக்கு துரித நிறையெடுப்பும், மதிப்பீடும்

(அலுவலக செய்தியாளர்)

உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிமனையினரால் சிறார்களுக்கான துரித நிறையெடுப்பும், மதிப்பீடும் முல்லை மாவட்டத்தில் நடாத்தப் பெறவுள்ளது.

எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் குட்பட்ட பகுதிகளிலும் 22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகள் முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளிலும் மேற்படி திட்டம் நடாத்தப் பெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 5வயதிற்குட்பட்ட அனைத்துப் பிள்ளைகளினதும் நிறை,உயரம் என்பன அளவிடப் பெறவுள்ளதால் பெற்றோர்கள் முக்கிய கவனமெடுத்து சிறார்களின் பதிவுகளை மேற்குறிப்பட்ட தினங்களில் மேற்கொள்ளும் வண்ணம் முல்லை மாவட்ட மாகாண சுகாதாரசேவைப் பிரதிப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (சோ)

# வீரவணக்கம்

## கப்டன் இளங்கோவன்




### -பூநகரிப் பகுதியிலுள்ள-

## ஒல்லாந்தர் கோட்டையருகேயுள்ள குளத்தைப் பாதுகாக்கக் கோரிக்கை

பூநகரிப் பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள ஒல்லாந்தர் கோட்டைக்கருகில் உள்ள குளம் தென்னோலையை ஊறவிடுவதாலும், சூழவுள்ள சில குடும்பங்களின் செயற்பாடுகளாலும் அழுக்கடைந்து துர்நாற்றம் வீசுவதுடன், அதிலுள்ள தாமரைகள் அழியும் நிலையும் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுகின்றது. இது விடயமாக உரியவர்கள் அக்கறை எடுக்க வேண்டுமென பொது மக்கள் தெரிவிக்கின்றனர். தண்ணீர் தட்டுப்பாடான இவ்வேளையில் கால் நடைகள் இக்குளத்தை பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. (34)

### -கரைதுறைப்பற்றுப் பிரதேச

## கி.அ. சங்கங்கள், மாதர் சங்கங்களின் வேலைத்திட்டம் குறித்த கலந்துரையாடல்

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கம் ஆகிய இரு பிரிவுகளுக்குமான சிறப்புக் கலந்துரையாடல் கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பணிமனை கேட்போர் கூடத்தில் உதவி அரச அதிபர் அ.சோதிநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரச்சினைகள், முன்னேற்றத்திற்குத் தடையாகவுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அந்தப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர், மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆகியோர் கூறினார்கள்.

இனிவரும் காலங்களில் கிராமத்தில் எத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதென்றாலும் கிராம அபிவிருத்திச் சங்கங்களினூடாகவே அவை செய்யப்படும் எனவும், அவர்களுடைய கோரிக்கைகள், பிரச்சினைகளை ஓரளவு தீர்ப்பதற்கு முயற்சி எடுப்பதாகவும் உதவி அரச அதிபர் அ.சோதிநாதன் தெரிவித்தார். இக் கலந்துரையாடலில் 48 கிராம அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இரு பிரிவுகளாக இக் கலந்துரையாடல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (20)

# "செச்னியாவுக்கு சுதந்திரம் கொடுங்கள்"

# உங்களை அமைதியாக வாழவிடுகிறோம்

## –செச்னிய தீவிரவாதத் தலைவர் கடிதம்

(மொஸ்கோ)

**ரஷ்ய சனாதிபதி புட்டினுக்கு செச்னிய தீவிரவாதிகளின் தலைவர் ஷமீல் பசயேவ் ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். இதில் "உங்களை அமைதியாக வாழவிடுகிறோம். எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.**

ரஷ்யாவின் அங்கமான செச்னியாவில் முஸ்லிம்கள் பெருமளவில் வசித்து வருகிறார்கள். அதனால் அதைத்தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்றுகோரி தீவிரவாதிகள் ஆயுதப்போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

ரஷ்யாவில் 2 விமானங்கள் சமீபத்தில் தகர்க்கப்பட்டன. பெஸ்லான் நகரிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தைத் தீவிரவாதிகள் கைப்பற்றி அங்கிருந்த மாணவர்களை பணயக்கைதிகளாகச் சிறைப்பிடித்தனர். அவர்களை மீட்பதற்காக நடந்த சண்டையில் 300இற்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள்.

பள்ளிக்கூடத்தில் நடந்த சம்பவத்துக்கு எந்த அமைப்பும் முதலில் பொறுப்பேற்கவில்லை. இப்போது செச்னிய தீவிரவாதிகளின் தலைவர் ஷமீல் பசயேவ் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவர் தான் இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று சந்தேகித்த ரஷ்ய அரசு, இவர் தலைக்கு 50 கோடி ரூபாய் விலை நிர்ணயித்தது. பசயேவ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

எனது குழுதான் என் தலைமையிலான ரியாதுஸ்-சலிக்கின் குழுவினர்தான் பள்ளிக்கூடத்தைக் கைப்பற்றினர். அதேபோல் அவர்கள்தான் 2விமானங்களையும் தாக்கித்தகர்த்தனர்.

பள்ளிக்கூடத்தைக் கைப்பற்றி நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கர்னல் ஆர்ஸ்ட் கோயேவ் தலைமை தாங்கினார்.

ரஷ்ய அதிரடிப்படைதான் முதலில் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலால் தான் உயிரிழப்பு ஏற்பட்டது. இவ்வாறு அந்த அறிக்கையில் பசயேவ் கூறியிருக்கிறார். அந்த அறிக்கை தீவிரவாதிகளின் காவ் கஸ் சென்டர் காம் இணையத் தளத்தில் இடம்பெற்றுள்ளது. கடிதம் பசயேவ் ரஷ்ய சனாதிபதி புட்டினுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் "நீங்கள் செச்னியாவுக்குச் சுதந்திரம் கொடுங்கள். நாங்கள் உங்களை அமைதியாக வாழவிடுகிறோம்" என்று அந்தக் கடிதத்தில் பசயேவ் குறிப்பிட்டிருக்கிறார்.



நேற்றுப்பாக்தாத்தில் இடம்பெற்ற வீதியோரக்குண்டு வெடிப்பால் சேதமடைந்த காரிற்கு அண்மையாக ஒன்று சேர்ந்திருக்கும் ஈராக்கியர்கள். இக்குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்தனர் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

## குடியிருப்புக்கள் மீது குண்டுவீச்சு பலூஜாவில் 54 பேர் பலி; பலர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கில் பலூஜா நகரில் தீவிரவாதிகள் தலைவர் ஜர்க்கா வியின் தாஹீத் மற்றும் ஜிஹாத் குழுவினர் தங்கி இருப்பதாக சந்தேகிக்கப்பட்ட வீடுகள் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டு வீசித்தாக்கின. இதில் 54 பேர் கொல்லப்பட்டனர். 27 பேர் காயமடைந்தனர். அவர்களில் 17 பேர் சிறுவர்கள், 2பேர் பெண்கள். பலூஜா நகர பெரிய வைத்திய சாலைத் தரையைக் காயமடைந்தவர்களின் உடலில் இருந்து வழிந்த இரத்தம் மூடி இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குடும்பத்தினர் நேபாளத்தில் இருந்து வெளியேற உத்தரவு

(வோஷிங்டன்)

நேபாளத்தில் அமெரிக்கர்கள் மீது மாவோயிச தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடிய அபாயம் இருப்பதால் தலைநகர் காத்மண்டில் உள்ள யு.எஸ்.தூதரக அதிகாரிகளின் குடும்பத்தினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று அமெரிக்க அரசு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை செவ்வாய்க்கிழமை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அவசரப் பணிகளுடன் தொடர்பில்லாத தூதரக அதிகாரிகளும், நேபாளத்தில் உதவிப்பணிகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க அமைப்பினரும் அங்கிருந்து வெளியேறி விட வேண்டும். அவசர முக்கியத்துவம் வாய்ந்த அலுவல் இருந்தால் நேபாளம் செல்லலாம். இல்லையெனில் அந்த நாட்டுக்குச் செல்வதை ஒத்திப்போடுங்கள் தலைநகர் காத்மாண்டிலிருந்து அமெரிக்கப்பிரஜைகள் வெளியே செல்ல வேண்டாம் என்றும் அமெரிக்க அரசு அறிவுறுத்தியுள்ளது.

## பாதுகாப்பு குறைபாட்டை வெளிப்படுத்த பாராளுமன்றுக்குள் வெடிகுண்டு சாதனங்களைக் கடத்திய பத்திரிகை நிருபர்

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் எந்த அளவுக்கு பலவீனமாக இருக்கின்றன என்பதை வெளியுலகத்திற்கு எடுத்துக்காட்ட ஒரு நிருபர் விரும்பினார். 'சன்' பத்திரிகையின் நிருபரான அந்தோனி பிரான்ஸ் பாராளுமன்றத்தின் சர்வராக வேலைக்குச் சேர்ந்தவர். 3வாரம் அங்குவேலை பார்த்தார். அவர் துணைப்பிரதமர் ஜான் பிரஸ்காட்டுக்கு 'தேநீர்' கொடுத்துப் பரிமாறும் காட்சியை அந்துப்பத்திரிகை போட்டோ எடுத்து பிரசுரித்தது . அவர் சர்வராக வேலை பார்த்த நேரத்தில், வெடிகுண்டு தயாரிப்பதற்குத் தேவையான மின்சாரக் கம்பி, டைமர், மின்கலங்கள் போன்றவற்றைப் பாராளுமன்றத்திற்குள் கடத்தினார்.

"நான் ஒரு தீவிரவாதியாக இருந்தால், வெடிகுண்டைக் கழிவறையிலோ, நான் வேலைசெய்த தேநீர்ச்சாலையிலோ வைத்துப் பாராளுமன்றத்தையே தகர்த்திருக்க முடியும்" என்று நிருபர் அந்தோனி பிரான்ஸ் கூறினார்.

பாதுகாப்புக் குறைபாட்டை நிருபர் சுட்டிக்காட்டிய பிறகு, பாராளுமன்றப் பாதுகாப்புக்கு என்று தனி இயக்குனரை நியமிக்க வேண்டும், என்று அவைத் தலைவர் பீட்டர் ஹெய்ன் கோரியிருக்கிறார். பாராளுமன்றத்தில் குண்டு வெடித்தால் மந்திரிகள் உயிருக்கு மட்டுமல்லாமல் அங்கு பணியாற்றும் 14ஆயிரம் பேருக்கும் ஆபத்து ஏற்படும், என்றும் அவர் கூறினார்.



பலூஜாவில் வெள்ளிக்கிழமை பிற்பகல் அமெரிக்க வான்படைத் தாக்குதலினால் பூமியில் ஏற்பட்ட குழியினை மக்கள் பார்வையிடுகின்றனர். ஒரு அமெரிக்க ஜெட்விமானம் அல் – ஹைதா இயக்கத்தினருடன் தொடர்புடைய 10 அங்கத்தவர்கள் சந்திப்பொன்றை நிகழ்த்தியதாக நம்பப்படும் வீடொன்றின்மீதே இத்தாக்குதல் இடம்பெற்றதாக அமெரிக்கப்படையினரும் பொலிசாரும் கூறுகின்றனர். இத்தாக்குலில் குறைந்தது மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

## நேரடித் தேர்தலை இரத்துச்செய்ய புட்டினின் முடிவிற்கு முன்னாள் ரஷ்ய சனாதிபதிகள் எதிர்ப்பு

(மொஸ்கோ)

ரஷ்ய பாராளுமன்ற கீழ் சபைக்கு (டுமா) நேரடித்தேர்தலை இரத்துச்செய்யும் நோக்கில் சனாதிபதி புட்டின் மேற்கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கைக்கு முன்னாள் சனாதிபதி கோர்பச்சேவும், யெல்த்சினும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தற்போது ரஷ்ய பாராளுமன்றக் கீழ் சபையின் 450 உறுப்பினர்களில், சரி பாதிப்பேர்(225) மற்றும் பிராந்திய ஆளுநர்கள் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த நேரடித் தேர்தல் முறையை இரத்துச்செய்துவிட்டு, அரசியல் கட்சிகளுக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் இடங்களை ஒதுக்கும் முறையைக் கொண்டுவரப்போவதாக ரஷ்ய அதிபர் புட்டின் செப்ரெம்பர் 13இல் அறிவித்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிளவுபடாத சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர் மிகையில் கோர்பச்சேவ் அறிக்கை விடுத்துள்ளார். புட்டின் நடவடிக்கையைக் கண்டித்து ரஷ்யாவின் முன்னாள் சனாதிபதி போர்ரிஸ் யெல்சிலும் அறிக்கை விடுத்துள்ளார். புட்டின் கொண்டுவர உத்தேசித்துள்ள மசோதாக்கள் சட்ட மாகாமல் தடுப்பதற்கு இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

## ஆப்கானிஸ்தான் தேர்தல் பாதுகாப்பிற்கு கூடுதல் இராணுவத்தை அமெரிக்கா அனுப்புகிறது

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி தேர்தல் நடக்கவிருக்கின்றது. தேர்தலின் போது பலத்த பாதுகாப்பு அளிப்பதற்காக கூடுதலாக 700 துருப்புக்களை அமெரிக்கா அனுப்புகிறது. கூடுதல் துருப்புக்களையும் சேர்த்தால் ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கத் துருப்புக்களின் பலம் 19 ஆயிரம் ஆகும்.

வடக்கு கரோலினாவில் உள்ள போர்ட் பிராக் என்ற இடத்தில் இருந்து கூடுதல் இராணுவம் எப்போது கிளம்பும் என்று தெரியவில்லை. இதற்கிடையில் சனாதிபதி கர்சாய், காபூலுக்கு வெளியே கார்டெஸ் நகரில் நடந்த பேரணியில் கலந்து கொள்வதற்காக உலங்கு வானூர்தியில் சென்ற போது தீவிரவாதிகள் வீசிய ரொக்கெட், உலங்கு வானூர்திக்கருகில் விழுந்து வெடித்துள்ளது.

இதனால் கர்சாயை எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தலை ஒரு மாதம் தள்ளி வைக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

## பாகிஸ்தான் இராணுவம் ஏவுகணைத் தாக்குதல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் மலைவாசி மக்கள வசிக்கும் மலைப் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடங்களை நோக்கி பாகிஸ்தான் இராணுவம் ஏவுகணை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளது. பதிலுக்குத் தீவிரவாதிகள் இராணுவ முகாம்களை நோக்கி ரொக்கெட்டுக்களை வீசித்தாக்கினர். ஆனால் அவை முகாம்கள் அருகே விழுந்ததால் சேதம் எதுவும் ஏற்படவில்லை. இராணுவம் நடத்திய தாக்குதலில் உயிர்ச்சேதம் ஏற்பட்டதா? எத்தனை பேர் இறந்தனர்? என்பன போன்ற விபரங்கள் கிடைக்கவில்லை.



கிர்க்கிலுள்ள ஈராக் தேசிய பாதுகாப்புப்படைத் தலைமையகத்தில் ஒரு தற்கொலைக்கார்க் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் பத்துப்பேர் கொல்லப்பட்டுள்ளனர். இது இம்மாதத்தில் வடக்கு நகர்ப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட இரண்டாவது பெரியதாக்குதல் என ஈராக்கிய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.



தாய்லாந்தில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட மண் சரிவில் வீடு தரைமட்டமாகி, தாயாரும், இரண்டுவயதான மகனும் இறந்துள்ளனர்.

-உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு-

# வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சிறுவர் இல்லங்களிடையே விளையாட்டு

**உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்துச் சிறுவர் இல்லங்களுக்குமிடையேயான விளையாட்டுவிழா ஒன்றை நடத்துவதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒழுங்கு செய்துள்ளது.**

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சிறுவர் இல்லங்களின் புனரமைப்புக்கும். அபிவிருத்திக்குமான நிறுவகம் இதனை ஒழுங்கு செய்துள்ளது. அதன் இணைப்பாளர் இராசுரவியின் தலைமையில் சிறுவர் இல்லங்களின் இயக்குநர்கள் மற்றும் இல்லக் காப்பாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி நடைபெறவுள்ள இவ் விளையாட்டு நிகழ்வுகளின் ஒழுங்குகள் மற்றும் விதிமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. தமிழீழவிளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் கலந்து கொண்டு விதிமுறைகள் மற்றும் ஏற்பாடுகள் குறித்து விளக்கமளித்துள்ளார். இதிலே தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் நிர்வகிக்கப்படும் சிறுவர் இல்லங்களின் இயக்குனர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் சிறுவர் இல்லங்களின் நிர்வாக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ஸ்)

## சிறுவர் பராமரிப்பு பயிற்சிநெறி

சிறுவர் பராமரிப்பு, சிறுவர் நலத்திட்டம் தொடர்பான பயிற்சிநெறி பூநகரிப் பிரதேச செயலக மண்டபத்தில் நிர்வாகஉத்தியோகத்தர் இ.இராசன் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சிநெறியில் விரிவுரையை கரைச்சிப் பிரதேச சிறுவர் உரிமையை மேம்படுத்தும் உத்தியோகத்தர் நிகழ்த்தினார். (34)

## செல்வாநகரில் வீடு தீப்பற்றி முற்றாக எரிந்து நாசம்!

### உடமைகளும் அழிந்தன

கிளிநொச்சி செல்வாநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் வீடொன்று எதிர்பாராத விதமாக தீப்பற்றி எரிந்து அழிந்தது.

மேற்படி கிராமத்தில் வசித்து வருகின்ற வ.தங்கவேல் என்பவரது வீடே எரிந்து நாசமாகியுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில்; சமையல் அறையிலிருந்து தீப்பொறி கூரைக்குத்தாவியதனால் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதனால் உடமைகளில் பெரும் பகுதி முற்றாகத் தீயில் எரிந்து நாசமாகின.

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த இக்கிராம மக்கள் அண்மையிலேயே மீள்குடியமர்ந்தமை குறிப்பிடத்தக்கது.



கடந்த வாரம் புதுக்குடியிருப்பில் தீவிபத்தினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ள வீடு ஒன்றைப் படத்தில் காண்கிறீர்கள். (படம்-தவரட்ணம்)

## பெண்கள் மேம்பாட்டு நிறுவன ஏற்பாட்டில் மன்னாரில் பெண்கள் சங்கம நிகழ்வு

(மன்னார்)

மன்னார் மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் மன்னார் நகரிலும், ஆண்டான் குளத்திலும் மகளிர் சங்கம நிகழ்வுகளிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

ஆண்டான் குளத்தில் இன்று காலை 9.30 மணிக்கு மகளிர் சங்கம நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது. இதே போன்று நாளை மன்னார்நகர மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இவ்விரு சங்கம நிகழ்வுகளிலும் பிரச்சினைகள் தொடர்பாகக் கருத்தமர்வுகள் இடம் பெறவுள்ளதுடன் குழு நிலை ஆய்வுகளிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என மன்னார் மாவட்டப் பெண்கள் மேம்பாட்டு நிறுவனச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கு மாறு மாவட்டப் பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் கோரியுள்ளது.

## தியாகி திலீபனின் நினைவாக சிரமதான நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

தியாகி லெப்.கேணல் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அக்கராயன் பிரதேசத்தில் அக்கராயன், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், முட்கொம்பன், கண்ணகைபுரம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் பொதுமண்டபங்கள், ஆலயங்கள், பாடசாலைகள், மாவீரர் நினைவு மண்டபங்கள், கிராம அபிவிருத்திச் சங்க மண்டபங்கள் போன்ற அந்தந்தப் பகுதிக்கிராம சேவகர்களினால் அக்கராயன் பிரதேச அரசியல் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் பொது மக்களால் சிரமதானப்பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. (15)

## பாதுகாப்பற்ற இடத்தில் கிடந்த 'குறுனலை' உட்கொண்ட குழந்தை பரிதாப மரணம்!

பாதுகாப்பற்ற இடத்தில் இருந்த 'குறுனல்' மருந்தை உட்கொண்டு பகிதரன்-சதுர்சன் என்ற ஒன்றரை வயதுக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது.

கடந்த 11 ஆம் திகதி முதது ஐயன்கட்டு 2 ஆம் கண்டம் எனும் இடத்தில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்; விளையாடிக் கொண்டிருந்த குழந்தை வீட்டுததாழ்வாரத்தில் கட்டப்பட்டிருந்த குறுனல் பொதி தவறுதலாக கீழே வீழ்ந் திருந்ததை அவதானித்து அதனை எடுத்து உட்கொண்டது. இதனைக் கண்டதாயார் உடனடியாகக் கற் சிலைமடு திலீபன் மருத்துவமனைக்குக் கொண்டு சென்று அங்கிருந்து அம்பியூலன்ஸ் மூலம் புதுக்குடியிருப்பு மாவட்ட வைத்தி யசாலைக்குக் கொண்டு சென்ற வேளை இடைவழியில் பரிதாபமாக உயிரிழந்தது.சம்பவம் இடம் பெற்றவேளை சிறுவனின் தந்தையார் வேலைக்குச் சென்று விட்டார். தாயார் வீட்டுவேலைகளில ஈடுபட்டுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஊரக தேசிய எழுச்சிப் பேரவை புதிய நிர்வாகம் தெரிவு

திருமுறிகண்டி தேசிய எழுச்சிப் பேரவை நிர்வாகத்தெரிவு திருமுறிகண்டி வலயப் பொறுப்பாளர் ஊடாக கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் காண்டீபன் தலைமையில் நடைபெற்றது.

இதில் செயலாளராக பொ.சத்திவேல், உபசெயலாளராக சி.நித்தியானந்தராசா பொருளாளராக வே.நாகராஜாவும், உறுப் பினர்களாக கோ.பால்ராசா, ச.கிருபாகரன், தி.ஜீவானந்தம், கா.இராசேந்திரம், சு.சிவகுமார், மு.காளிமுத்து, ந.சபாரட்ணம் ஆகியோரும் தெரிவாகினார்கள்.

## கிளி. வலயத்தில் இரு பாடசாலைகளில் இரண்டாம் கட்ட சமூகநலப் பயிற்சி நெறி

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து சுகாதார திணைக்களத்தினூடாக ஏ.எஸ்.பி நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடாத்தப்படும் 2ஆம் கட்ட சமூகநலப்பயிற்சி நெறி கடந்த 11,12ஆம் திகதிகளில் கிளி/மத்தியகல்லூரி, கிளி/மகா வித்தியாலயம் ஆகியவற்றில் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இப்பயிற்சி நெறியில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் 50 இற்கு மேற்பட்ட மாணவர்களும், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்களும் கலந்து கொண்டனர். மேலும் இப்பயிற்சி நெறியில் முதலுதவி, உடலமைப்புத் தொழிற்பாடும், முதலுதவி செய்முறைகள், தொற்று நோய்கள், சுகாதார நடைமுறைகள் தொடர்பாக பல விரிவுரைகள் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவு ஆணையாளர், திட்டஇணைப்பாளர், தலைவர், தொண்டர்கள் ஆகியோராலும் சுகாதார திணைக்களப்பிரதி நிதிகளாலும் வழங்கப்பட்டது.

இப்பயிற்சி நெறியில் முதலுதவி தொடர்பான கைந்நூல் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் தயாரிக்கப்பட்டு பயிற்சியில் பங்கு பற்றிய ஒவ்வொரு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. மேலும் பயிற்சியை நிறைவுசெய்த ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் முதலுதவிப் பெட்டிகளும் அதற்கான மருந்துகள், உபகரணங்களும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் இத்திட்டத்தில் வழங்கப்பட்டதோடு, ஒவ்வொரு பாடசாலைகளிலும் பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் முதலுதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டதோடு, பயிற்சியின் நிறைவில் பரீட்சையும், சான்றிதழ், சின்னங்கள் வழங்கும் ஒழுங்கும் சென்ஜோன்ஸ் அம் புலன்ஸ் படைப்பிரிவினரால் செய்யப்பட்டுள்ளது.

## பூநகரியில் காலபோக பயிர்ச் செய்கைக் கூட்டம்

(பூநகரி)

பூநகரி கமநலசேவை அதிகாரப் பிரதேசத்தில் காலபோகப் பயிர்ச் செய்கை சம்பந்தமான கூட்டம் பூநகரிக் கமநல உத்தியோகத்தர் எஸ்.சுந்தரமூர்த்தி தலைமையில் கடந்த சில நாட்களாக நடைபெற்று வருகின்றது.இம்மாதத்தில் 6 ஆம் திகதி கறுக்காய்த் தீவு ஞானிமடத்திலும், 10ஆம் திகதி நேர் அடம்பன் தியாகத்திலும், 11ஆம் திகதி பிரமன்கிராய் இராமலிங்கம் வீதி சிறுவர் பாடசாலையிலும், 13ஆம் திகதி செம்பன் குன்றுஆலங்கேணியிலும், 14ஆம் திகதி செட்டிய குறிச்சி செல்லையா தீவிலும் நடைபெற்றுள்ளன .தொடர்ந்து நேற்றுக் காலை 10.00 மணிக்கு சாமிப்புலம், பொது மண்டபத்திலும், பி.பகல் 3.00 மணிக்கு நல்லூர் ம.வியிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒவ்வொரு கமக்கார அமைப்பு எல்லைப் பிரதேசத்தில் பயிர் செய்யப்படும் காணியின் அளவு, நெல் விதைக்க ஆரம்பிக்கும் திகதி, அடிக்கட்டு உரப்பசளை விநியோகம் போன்ற பல்வேறு விடயங்கள கலந்துரையாடப்பட்டன. (34)

### கிளை நிலையம்திறப்பு

முல்லை. பரந்தன் வீதியில் சுண்டிக்குளம் சந்திக்கு அருகாமையில் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கிளை நிலைய மொன்றினை திறந்து வைத்துள்ளது.

கடந்த புதன் கிழமை சங்கத்தின் செயலாளர் வைரவன் அவர்களால் இந்த விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இதனையடுத்து விற்பனை நிலையம் அமைந்துள்ள அரை ஏக்கர் காணியில் பனை, தென்னை,மீள் நடுகைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## இலக்கத்தகடு, வரிஅட்டையின்றிச் செல்லும் வாகனங்கள் மீது சட்ட நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

இலக்கத்தகடு இன்றி பாவனைக்குட்படுத்தப்பட்டுவரும் வாகனங்கள் மற்றும் வரிஅட்டை இன்றி செலுத்தப்படும் வாகனங்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப் பெறவுள்ளதாக தமிழீழ வாகனபோக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.நேற்று முன்தினம் மேற்படி இலக்கத் தகடுகள் மற்றும் வரி அட்டைகள் இன்றி வீதிகளில் பயணித்த வாகனங்கள்யாவும் கிளிநொச்சி நகரப்பகுதியில் வைத்து தமிழீழ வாகனப் போக்கு வரத்து கண்காணிப்புப் பிரிவின ரால் தடுத்து நிறுத்தப்பட்டு, வாகன ஓட்டிகளுக்கு இலக்கத்தகடு மற்றும் வரி அட்டை முக்கியம் குறித்து விதப்புரை வழங்கப்பட்டதுடன் தொடர்ந்தும் மேற்படி நடவடிக்கை மீறப்படும் பட்சத்தில் அவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அறிவுறுத்தல் வழங்கிப் பயணத்தை தொடர அனுமதித்தமையினைக் காணக்கூடியதாக விருந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)



# பார்த்தீபமே! பார்

குன்றிடாத கொள்கையுடன்
பன்னிரு நாள் பசிகிடந்து
மெய்யதனை நெய்யாக்கி
வெய்யவராம் பாரதத்தின்
பொய்முகத்தைச் சுட்டெரித்து
தமிழ் நெஞ்சுகளில் ஒளிவீசி
பார்வியக்கச் சுடர்கின்ற பார்த்தீபமே!
காலக் கங்கையின் வேகப்பாய்ச்சலில்
ஆண்டுகள் பதினேழும்
அள்ளிச் செல்லப்பட்டாயிற்று
வல்வை மகனின் வழியிலேகி நீ
நல்லை வீதியில் நாவரண்டு போனதனை....
கற்பனைகளுக்குள் கட்டுப்படுத்தி
ஒப்பனை செய்ய முடியா உன் தியாகத்தை...
எல்லாமுமாய்ச் சொல்லிப் பார்க்கின்றோம்.

வார்த்தைகள் தான் வறுமையுற்றுப் போகின்றன
அட்சரமாக்க முடியா உன் அகிம்சையின் முன்னே
பேனாக்களும் தோற்றுப்போய் விடுகின்றன
ஆனாலும்.....
நாவரண்டும் நீயுதிர்த்த
நம்பிக்கை வார்த்தைகள் போல்
ஆர்ப்பரிக்கும் கடலெனத் தமிழர்
போர்க்கொடி சூடியுள்ளனர்.
கல்லறைகளுக்குள் நாம் வளர்க்கின்ற
வல்லமைகள் தந்த நெஞ்சுரத்தோடு
நிமிர்ந்து நடக்கின்றோம் நாம்.
அடங்கிப் போகார் தமிழரென்பது நீ
அறியாததா? இல்லைத்தானே
குற்றேவல் செய்து குனிந்து போகோமெனினும்
குலுக்கிக் கொண்டோம் கரங்களை
ஆனாலும் இலக்குகள் மாறவில்லை
மாறப்போவதுமில்லை. ஆகையால்,
போகின்ற போக்கிலே இது ஒரு
இடைவேளை போலவும்...

போர் ஓய்வுப் போகம் முடிவுக்கு
வந்துவிடும் போலவும் படுகிறது
பரவாயில்லை.
தமிழ்ச் சாதி எதற்குமே
தயாராய்த் தானே நிற்கிறது
உன்னைப் போலவே
சாவுக்குத் தமிழர்களைத் தவரல்லவே!
அன்று உன் செந்நா சொன்னது போல்
திலீபா! விண்ணிலிருந்து நீ தவழ்ந்த
மண்ணைப்பார்-நாளை
புன்னகை சிந்தப் புலிக்கொடி
பட்டொளி வீசிப் பறப்பதைப் பார்
அதற்கான நாட்கள் இன்னும்
அதிக தொலைவில் இல்லை.
அண்மையில் தான்
அந்நாட்களுக்காய்...
நின் நினைவுகளைச் சுமந்தபடி
நடக்கின்றோம் நாம்

க.லிங்கராஜா

# கட்டட நிர்மாணப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட பெருமளவு நிதி திரும்பிச் செல்லும் அபாயம்!

## துறைசார் தொழிலாளர் பற்றாக்குறையே முக்கிய காரணம்

(வடமராட்சி)

**யாழ். மாவட்டத்தில் கட்டட நிர்மாணப்பணிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த பெருமளவு நிதி பயன்படுத்தப்படாது திரும்பிச் செல்லலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. கட்டட வேலைக்கான மணல் உள்ளிட்ட மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் நிலவிவரும் சிரமங்களினாலும் துறைசார் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக் குறையினாலுமே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

இதனால் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவதில் ஒப்பந்தக்காரரிடையே ஆர்வமற்றதோர் சூழல் நிலவிவருவதாகவும், அத்துடன் பொறுப்பேற்கப்பட்ட ஒப்பந்த வேலைகள் கூட இக் காரணங்களினால் தாமதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் கட்டட மூலப்பொருட்களினது விலை ஏற்றத்தினாலேயே இந்நிர்மாணப் பணிகள் தாமதமடைவதாக ஒப்பந்தக்காரர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே யாழ்.மாவட்டத்திலுள்ள கல்வித்திணைக்களங்கள் அனைத்திலும் பாடசாலை நிர்மாணப்பணிகளுக்கென அரசினால் ஒதுக்கப்பட்ட நிதியில் 50 வீதத்திற்கும் குறைவான அளவு நிதியே பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

எனினும் எஞ்சிய நிதியின் ஒரு பகுதி இவ்வாண்டிலும் செலவழிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதால் வேலைகள் தொடர்ந்து முன்னெடுக்கக் கூடியதாக இருப்பதாக தொடர்புடைய வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (27)

## - வடகிழக்கு மாகாணப் பாடசாலைகளில் -

# கடல்வள தொழில்நுட்ப பாடத்திற்கு ஆசிரியர்களை நியமிக்க வலியுறுத்து

(வடமராட்சி)

வடக்கு-கிழக்குப் பாடசாலைகளில் கடல் வளத்தொழில் நுட்பப் பாடத்திற்கு கூடுதலான ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென நீர் உயிர்வள ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பான தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இச்சங்கம் கையளித்துள்ளது.

கடந்த வெள்ளியன்று யாழ். செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடம் பெற்ற வேளை வருகை தந்த மேற்படி ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், அங்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளித்தனர்.

அம் மகஜரில் "யாழ்.பல்கலைக் கழகத்தின் மீன்பிடியியல் டிப்ளோமாக் கற்கைநெறியினைப் பூர்த்தி செய்த 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் வெளியேறியுள்ளனர். இவர்களில் 50 பேர் தற்காலிகமாக சேவை அடிப்படையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 69 பாடசாலைகளில் பணியாற்றி வருகின்றனர். இதன் பயனாகக் கடந்த ஆண்டு சாதாரண தரப்பரீட்சையில் 700 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து முதன் முதலாக தோற்றிச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்.

எனினும் வட-கிழக்கின் ஏனைய பாடசால்லைகளிலும் இப்பாடத்தினைக் கற்பிப்பதற்கு முன்வந்துள்ள போதிலும்,ஆசிரிய ஆளணிப் பற்றாக்றை காரணமாகக் கற்பித்தற் செயற்பாடுகளை விரிவாக்க முடியாதுள்ளது. மேலும் நியமனம் தொடர்பாக நிச்சயமற்ற நிலை தொடர்வதால் தற்போதைய கற்பித்தற் பணிகளும் ஸ்தம்பித நிலைக்குச் செல்லலாம். இதனால் 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்களின் கற்றற் செயற்பாடுகள் பாதிப்புறும். இதனைக் கருத்திற்கொண்டு வட-கிழக்கு கடல்வள தொழில் நுட்பப் பாடத்திற்கு கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.(27)

## வேண்டுகை

கடந்தகால யுத்த நடவடிக்கையினால் இடைநிறுத்தப்பட்ட நாவற்குழிச் சந்தியிலிருந்து கோவிலாக்கண்டி துறைமுகம் வரை துரித கதியில் மின்இணைப்பை வழங்க உடன் நடவடிக்கையை மின்சார சபை எடுக்கவேண்டும் என நாவற்குழி கோவிலாக்கண்டி மக்கள் கோரியுள்ளனர். (௨௨)

# தாய்,சேய் நலத்திட்டம் குடாநாட்டில் 'போரூட்' அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் 'போரூட்' தொண்டர் நிறுவனத்தால் தாய், சேய் நலத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் தற்போது தாய், சேய்நலம் மற்றும் அவர்களுக்குத் தேவையான வைத்திய சுகாதார ஆலோசனைகளை வழங்குவதற்கு ஏற்ற மருத்துவமாதுக்கள்,சுகாதார ஆலோசகர்கள் போன்றோர் பற்றாக்குறையாகக் காணப்படுவதால் தாய், சேய் நலம் சம்பந்தமான விடயங்களில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளைக் கவனத்தில் கொண்டே இத்திட்டத்தினை 'போரூட்' நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கர்ப்பிணித்தாய்மார்கள், தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருடைய போஷாக்கினை அதிகரித்துச் செல்வதற்காக உணவுத்திட்டத்தை ஆரம்பித்துள்ளதுடன் இலவச வைத்திய ஆலோசனைக் கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றது. (33)

# வல்வெட்டித்துறை பொதுச்சந்தை புனரமைப்பிற்கு நிகொட் உதவி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சந்தையை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளை வழங்க நிகொட் நிறுவனம் முன்வந்துள்ளது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் பெரிதும் சேதமாக்கப்படுள்ள இச்சந்தையின் புனரமைப்பிற்கான இத்திட்டத்தினூடாக முதற்கட்ட நிதியாக 3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ் ஒதுக்கீட்டில் இருந்து மேற்படி சந்தையில் புதிய கடலுணவுச்சந்தை ஒன்றை அமைப்பது மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகள் என்பன மேற்கொள்ளப்படும். (33)

# யாழ்.நகர் அபிவிருத்தியை முன்னெடுக்கக் குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரினை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக யாழ்.நகர அபிவிருத்திக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரினை நவீன நகரதிற்குரிய அம்சங்களுடன் கூடிய நகராக்கும் முயற்சிக்கான குழுவில் பலதரப்பட்ட உயர் அதிகாரிகளும் அங்கத்துவம் பெறுவர்.

யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டிலான இக்குழு யாழ்.நகரின் அபிவிருத்திக்கான உள்ளூர் மற்றும் வெளியூர் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் நிதி உதவியையும், ஆலோசனைகளையும் ஒருங்கிணைத்துச் செயற்படும். (33)

# ஆசிரியை, மாணவர்கள் மீது பொலிஸ் தாக்குதல் குறித்து விசாரணை

(வடமராட்சி)

தென்மராட்சி- மிருசுவில் வடக்கு பகுதியில் மாலை நேரப் பாடசாலை மீது பொலிசார் நடத்திய தாக்குதல் தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு நேற்று முன்தினம் நேரில் விஜயம்செய்த இணைப்பதிகாரி ஆர்.பி.றுவன்சந்திர சேகர தலைமையிலான அதிகாரிகள் குழு பாதிக்கப்பட்ட ஆசிரியை மற்றும் மாணவர்களதுவாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளது.

இதேவேளை மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு ஆஜராகுமாறு கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று மிருசுவில் வடக்கு, சுட்டிபுரம் பகுதியிலுள்ள மாலை நேரக் கல்விக் கூடமொன்றினுள் அத்துமீறிப் பிரவேசித்த கொடிகாமம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் அங்குகற்பித்துக்கொண்டிருந்த ஆசிரியை மற்றும் மாணவர்கள்மீது தாக்குதல்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

# தமிழக அரசியல் கட்சிகளை திணறடிக்கும் வைகோவின் நடைப்பயணம்



எவரெஸ்டில் ஏறிய இந்தியருடன் வைகோ

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகச் செயலர் வைகோ உள்ளிட்ட ஏழு பேர் தமிழக காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். இது தமிழக அரசு மீண்டும் தனது பிடிவாத குணத்துடன் முருங்கை மரம் ஏறிவிட்ட நிலையைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

ஏற்கனவே தமிழக அரசு கலைக்கப்படுமா...முடக்கப்படுமா... எனும் விவாதத்தை எழுப்பியுள்ள நிலையிலும் தமிழக அரசு வைகோ மீது கைவைத்துள்ள நடவடிக்கை யானை தன் கையால் மண் அள்ளிப்போடுவதற்கு ஒப்பானது என்றுதான் கூறவேண்டும்.கடந்த ஆறுவார காலமாக வைகோவும் அவரது ம.தி.மு.க தொண்டர்கள் மூவாயிரம் பேரும் நெல்லையிலிருந்து நடைப்பயணத்தை ஆரம்பித்திருந்தார்கள். இந்த நடைப்பயணம் சென்னை தீவுத்திடலில் முடிவடையும் என்பதுதான் ஏற்பாடு.

ஏற்கனவே தமிழக பொலிஸ் அதிகாரியிடம் அனுமதி பெற்றுத்தான் வைகோ தனது 1000 கிலோமீற்றர் நடைப்பயணத்தை தொடங்கினார். இருந்தும் சென்னையிலிருந்து தீவுத்திடலை சென்றடைவதற்கு தமிழக காவல்துறை அனுமதி மறுத்துவிட்டது.

இதற்கு காரணம் இல்லாமலில்லை. தமிழகத்திலுள்ள ஏனைய கட்சிகள் போன்றே வைகோவின் நடைப்பயணம் தமிழக ஆளும் கட்சிக்கும் உவப்பான தொன்றல்ல.

ஆனால் ஒன்றும் செய்ய முடியாத நிலை. வைகோவின் நடைப்பயணத்தை முளையிலேயே தமிழக அரசு கிள்ளி எறிந்திருக்கும் மத்தியில் காங்கிரஸ் கூட்டணி இல்லாது இருந்திருந்தால், ஆனால் தவிர்க்க முடியாத நிலையில் கயிற்றில் நடப்பது போன்று தமிழக அரசு மௌனமாக தவித்தது என்னமோ உண்மைதான்.

ஆனால் சென்னையிலிருந்து தீவுத்திடல் வரை வைகோ மக்களை அணுகுவதை தமிழக அரசு துளியும் விரும்பவில்லை.அதனால்தான் சென்னையிலிருந்து தீவுத்திடல் வரை வைகோவின் நடைப்பயணத்திற்கு முட்டுக்கட்டை போட்டது.

ஏனெனில் மேடை போட்டு மைக் பிடித்து எவ்வளவுதான் தொண்டைக் கிழியைக் கத்தி ஒரு கருத்தைச் சொன்னாலும் அது மக்களைச் சென்றடையும் வீதம் குறைவுதான்.



வைகோ கைதான போது

மாறாக நடைப்பயணமாக தகிக்கு[illegible] வெயிலையும் பொருட்படுத்தாது மக்களி[illegible] அருகே சென்று கையைத் தொட்டு ஒரு கருத்தை முன்வைத்தால் அது எதிர்பார்த்த பலனைவிடக் கூடுதலான பலனைத்தரும்.

இதனைத்தான் வைகோவின் நடைப்பயணம் எடுத்துக் காட்டுகிறது என்பதில் எவ்வித முரண்பாடும் தமிழக அரசுக்கு இருக்கவில்லை. அத்துடன் ஆளும் கட்சியாகவிருந்தும் இதுவரை தமிழக முதலமைச்சர் இவ்வாறு நடைப்பயணமாக மக்களை தாம் அணுகியதில்லை. ஆனால் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் ம.தி.மு.க. செயற்படுவது ஆளும் கட்சியை எரிச்சலடைய வைத்திருக்கும் என்பதிலும் மாற்றமிருக்க வாய்ப்பில்லை.

என்ன செய்யலாம் எனும் தமிழக அரசின் சிந்தனைக்கு உதித்த காரணம் தான் சட்டம் ஒழுங்கு சீர்குலைத்துவிடும் எனும் அருமையான சொற்பதம். ஏற்கனவே தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு சீரில்லை என்றுதான் எதிர்க்கட்சிகள் கோசமெழுப்பியும் மத்தியரசிடம் முறையிட்டும் வருகின்றன.

இந்த நிலையில் வைகோவின் நடைப்பயணத்திற்கு வெற்றி கிடைக்கக் கூடாது எனும் வகையில் தமிழக அரசு, சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டித் தடைவிதித்தது.

ஆனால் 41 நாட்களாக சட்டம் ஒழுங்கு மீறப்படவில்லை. 42 ஆவது நாளில்தான் சட்டம ஒழுங்கை ம.தி.மு.க. சிதறடிக்கப்போகின்றதா...? என்று ம.தி.மு.க.வினர் சீறுகின்றனர்.

மறுபுறம் ஜெயலலிதா காமராஜர் வீதியில் தேர்தல் பிரச்சாரம் செய்யலாமென்றால் ஏன் பாதசாரிகள் போன்று நாம் நடைப்பயணம் செய்யக்கூடாது...

* மூன்று மூன்று பேராக ம.தி.மு.க தொண்டர்கள் நடந்து சென்றது எப்படிப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகும்...?

* அ.தி.மு.க.வினர் சைக்கிள் பேரணி நடத்தி வீதிகளைத் தடைசெய்தமையினை மறந்து விட்டார்களா...

* ஊர் சொல்லட்டும்; உலகம் சொல்லட்டும்; அரசியல் கட்சிகள் சொல்லட்டும்; அ.தி.மு.க.விலுள்ள மனச்சாட்சியுள்ள தொண்டர்கள் சொல்லட்டும். அ.ம.தி.மு.க.வின் நடைப்பயணம் சட்டம் ஒழுங்கை சீர்குலைப்பதாக... இவ்வாறு வைகோ தமிழக அரசு மீது போர்க்கணை தொடுத்துள்ளார்.

அது மட்டுமன்றி ம.தி.மு.க.மீது பழி போடவும் கலவரம் மூட்டவும்தான் தமிழக அரசு முயற்சி செய்தது ஆனால் பலிக்கவில்லை என்றும் வைகோ குற்றம் சுமத்தியுள்ளார்.

இது இவ்வாறு ஒருபுறம் இருக்க வைகோவின் இந்த நடைப்பயணம் எதிர்பார்த்த வெற்றியை ஏற்படுத்தியுள்ளதா... என்றால் ஆம் என்றுதான் ஆய்வாளர்கள் கருத்துக் கூறுகின்றார்கள்.

இதேவேளை கைகோவின் நடைப்பயணத்தை தி.மு.க.உள்ளிட்ட ஏனைய கட்சிகள் கூட பெரும்பாலும் விரும்பவில்லை என்றுதான் கூறவேண்டும்.

ஏனெனில் நடைப்பயணம் மூலம் ம.தி.மு.க. மக்களை அதிகம் கவர்ந்து விடும்.. அது தங்களுக்கு மதிப்பை இறக்கி விடும் என்பதுதான் முதல் காரணம்.

உண்மை நிலையும் அதுவாகத்தான் இருக்க முடியும் மக்களவைத் தேர்தலின் வெற்றியின் வெளிச்சம் தெளிவான போதும் வைகோ எந்தத் தொகுதியிலும் போட்டியிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது. கட்சியை வளர்க்க வேண்டும் என்று அவர் காரணம் கூறியிருந்தார்.

ம.தி.மு.க.மலர்ந்து 11 வருட காலத்தில் பெரிதாக சோபித்ததில்லை. கடந்த மக்களவையில் இக்கட்சி நான்கு தொகுதிகளில்தான் போட்டியிட்டது.

இந்த நிலை மாறவேண்டும் என்பது வைகோவின் கனவாக இருக்க முடியும். தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு பின்னரான காலப்பகுதிகளில் ம.தி.மு.க. பெரும்பான்மை சக்தியாக உருவாகியிருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவர் அமைச்சரவையைத் துறந்தார் என்று கருத்துக்கள் கூறப்படுகின்றன.

அதற்கு சும்மா இருந்துகொண்டு கட்சியை வளர்ந்து வரும் சக்தியாக மாற்ற முடியாது மக்களை நெருங்கிச் சென்று பழகவேண்டும். மக்கள் மனங்களை கொக்கி போட்டுக் கவர வேண்டும் அதற்காகவே தான் வைகோ 42 நாட்கள் நடைப்பயணத்தைப் பூர்த்தி செய்துள்ளார் என்று நம்பப்படுகின்றது.

ஆனால் தொண்டர்களைச் சந்திப்பதுதான தனது நடைப்பயணத்தின் நோக்கம் என்று வைகோ கூறியுள்ள கருத்தை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்ளத்தயாரில்லை.




சென்னா நம்புங்க சார், நடைப் பயணமெல்லாம் ஏதுமில்லை! 'மாக்னிங் வாக்'தான் போய்க்கிட்டிருந்தோம்!

தி.மு.க.கருணாநிதிக்கு பின்னர் ம.தி.மு.க.வை வளர்த்தெடுத்து, பெரிய சக்தியாக உருவாக்குவதென்பது இயலாத காரியம். அப்போது வேறு கட்சிகள் கூட வளர்ந்துவிடக்கூடும்! அதனால்தான் தி.மு.க. தலைவர் காலத்திலேயே வைகோ ம.தி.மு.க.வை வளர்த்துவிட அத்திவாரமிட ஆரம்பித்துள்ளார்.

அவருடைய இலக்கு எல்லாம் நீண்ட கால தொலை நோக்குடையது தான்! அதாவது தி.மு.க தலைவருக்கு பின்னரான எதிர்காலத்தினைத்தான் குறி வைத்து அவர் இன்று நகர்வுகளை நகர்த்தி வருகின்றார் என்றுதான் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

இதேவேளை தி.மு.க தலைவர் கருணாநிதியின் தலைமையின் கீழ் ஒன்றுபட்டிருக்கும் வைகோ நாளை மு.க.ஸ்டாலினின் தலைமையின் கீழ் நிச்சயம் ஒன்றுபடமாட்டார் என்று தான் ஆருடம் கூறப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே நடந்து முடிந்த தி.மு.க மாநாட்டில் கருணாநிதியின் பின்னர் தி.மு.க தலைமைப் பதவி மு.க.ஸ்டாலினின் கைகளில் தான் என்று இலைமறை காயாகக் கூறப்படுகின்றது.



விடுதலையின் போ[illegible]

கருணாநிதியின வாரிசாக தலைமையேற்கும் மு.க.ஸ்டாலினின் கீழ் வைகோ அணிதிரளமாட்டார் என்றும், நிச்சயம் மீண்டும் வெளியேறும் நிலை உருவாகும் என்றும் கணிக்கப்படுகின்றது.

அதற்காகத்தான் ம.தி.மு.கவை வலுவுள்ள சக்தியாக, மாபெரும் அரசியல் கட்சியாக தமிழகத்தில் மிளிர வைக்க வைகோ இன்று தனது நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளார் என்று கூறும் தி.மு.க தொண்டர்களும் இருக்கின்றார்கள்.

அதுமட்டுமன்றி கருணாநிதியின் தலைமையின் கீழ் ஒன்றுபடும் தி.மு.க வினர் நிச்சயம் அனைவருமே மு.க.ஸ்டாலினின் தலைமையின் கீழ் அணிதிரள்வார்கள் என்றும் நம்பமுடியாது.

அதனால் தான் தி.மு.க மாநாட்டில் கருணாநிதிக்குப் பின்னர் அடுத்த தலைமை மு.க ஸ்டாலின் என்று வெளிப்படையாக போட்டு உடைக்கப்படவில்லை. மறைமுகமாக மட்டும் தான் எதிரொலித்திருக்கின்றது.

இதனை ம.தி.மு.க செயலர் பயன்படுத்திக் கொள்ள முனைவு காட்டலாம். எதிர்காலத்தில் மு.க.ஸ்டாலினின் தலைமையினை ஏற்க விரும்பாதவர்கள் வெளியேற முற்படும் போது மாபெரும் சக்தியாக ம.தி.மு.க அவர்களை அரவணைக்க வேண்டும்... என்றே வைகோ காய் நகர்த்துவதாக பெரும்பான்மையாக எதிர்வு கூறப்படுகின்றது.

இதனைத்தான் தி.மு.கவும் கணிப்பீடு செய்துள்ளது. அதனால் தான் வைகோவின் நடைப்பயணம் குறித்து இதுவரை தி.மு.க தலைவர் உட்பட எவரும் நல்ல விதமாகக் கருத்துக் கூறவில்லை. தி.மு.க.வின் சண் (SUN) தொலைக்காட்சியில் கூட வைகோவின் நடைப்பயணச் செய்திகள் இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமன்றி பொடோவில் சிறையிலிருந்து வெளிவந்த போது ஓடோடிச் சென்று ஆரத்தழுவிய தி.மு.க தலைவர் கருணாநிதி இன்றோ நடைப்பயணத்திற்கு குறைந்தது ஒரு வாழ்த்துக் கூட தெரிவிக்கவில்லை. கடப்பாறை விழுங்கியவர்போல் இருக்கின்றார்.

ஆனால் எவரெஸ்டில் ஏறிய முதல் இந்தியரான மன்மோகன் சிங், காங்கிரசின் முன்னாள் தலைவர் கே.வி. தங்கபாலு உட்பட முன்னாள் அ.தி.மு.க, தி.மு.க பிரமுகர்கள் வைகோவின் நடைப்பயணத்திற்கு வாழ்த்துத் தெரிவித்ததுடன் நடைப்பயணத்தில் வைகோவைச் சந்தித்துமுள்ளனர் என்பது வைகோ மீதுள்ள நல்லெண்ணத்தைத்தான் எடுத்துக்காட்டுகின்றது.

இதனால்தான் வைகோவின் நடைப்பயணம் நல்ல பலனைக் கொடுத்திருப்பதாக நம்பிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது.

ம.தி.மு.கவின் வளர்ச்சிக்காக வைகோ புதியபுதிய வியூகங்களுடன் மக்களை அணுகுவதில்தான் முனைப்புக் காட்டி வருகின்றார்.

அந்தவகையில் தான் மாவட்டம் தோறும் ம.தி.மு.க தொண்டர்கள் இரத்த வங்கி அமைத்து மக்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களில் உதவவுள்ளனர் என்று அறிவித்துள்ளார்.

தற்போதுள்ள 3000 ம.தி.மு.க சீருடைத் தொண்டர்கள் சிறுதுளி பெருவெள்ளமென எதிர்காலத்தில் ஒரு இலட்சமாக அதிகரிக்கப்படவும் இருப்பதாக் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த வகையில் பார்த்தால் எதிர் காலத்தில் ம.தி.மு.க வலுவுள்ள சக்தியாக உறுதியான கட்சியாக உருவாகும் என்று தான் எதிர்பார்ப்பு எழுந்திருக்கின்றது.

எனது இலக்கு 2006 சட்டமன்றத் தேர்தல் தான் என்று வைகோ கூறியுள்ளார். உண்மையில் அவரது உறுதியான இலக்கு எட்டப்படுவதனால் 2006 இற்கு அப்பாற்பட்ட சட்டமன்றத் தேர்தல்களில் தான் அது எதிரொலிக்க முடியும் என்றால் மிகையில்லை.



**அ.கலைவாணி**

# தொண்டமானின் இணைவுடன் ஐ.ம.சு.மு.அரசு உறுதியானதாகிவிட்டதா?

சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கக்கூடிய பலம் வாய்ந்ததாக அமைந துவிட்டதாக தற்பொழுது நம்பப்படுகிறது. ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்கட்சி அரசாங்கத்தின் அமைச்சரவையில் இணைந்துகொண்டதையடுத்து இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

பெரும்பான்மையை நிரூபிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளபோதும் அதற்கான சந்தர்ப்பம் அதற்கு இன்னமும் கிட்ட காக ஐ.ம.சு.மு. வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான ஒருநிலையை அது எட்டிவிடவில்லை. ஆட்சியை ஏற்ற பின்பும் கூட பொருளாதார நிலையில் பெரிய மாறு தல்கள் எவையும் ஏற்பட்டு விடவில்லை.

இதற்கு முக்கிய காரணம் சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட தேக்க நிலையாகும். அதிலும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் சமாதானம் குறித்து இருந்த நம்பிக்கையைக் காட்டிலும் இப்பொழுது சர்வதேச ரீதியில் அந்த நம்பிக்கை குறைந் திருப்பது இதற்குக்காரணமாகும்.

சமாதான முயற்சிகள் தொடர்பான நம்பிக்கைகள் வளர்க்கப்படாமையானது வழங்கிய வாக்குறுதியை நம்பி வாக்க ளித்த இவர்கள் இப்போது போராட்டம் குறித்து அறைகூவல் விடுத்து வருகின்றனர். சம்பள உயர்விற்கு வரவு-செலவுத் திட்டம் வரை அவர்களைப் பொறுத திருக்குமாறு அரசாங்கம் கோரிவருகிறது. ஆனால் வரவு-செலவுத்திட்டமோ பிற் போடப்பட்டு வருகிறது. அது வரை இடைக காலக் கொடுப்பனவாக 3000 ரூபா தொடக கம் 5000 ரூபா வரை தொழிற்சங்கங்கள் கோருகின்றன. தவறின் போராட்டம் நடத்தப் போவதாகக் கூறுகின்றன. ஆனால் அவ்வாறான இடைக்காலக் கொடுப்பனவு கள் வழங்கப்பட மாட்டாது என நிதி அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

இது மட்டுமல்லாது இனப்பிரச்சினைக் குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் விடயத்தில் ஜே.வி.பி.யின் போக்கு மிகவும் மோசமானதாகும். இன்றைய சமாதான முயற்சிகளை முற்றுமுழுதாக வெளிப்படை யாகவே அது நிராகரிக்கும் நிலையானது அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுக்கு மிகவும் பாதகமானதாகும். விரும்பியோ விரும்பா மலோ சமாதான முயற்சிகளை நகர்த்த வேண்டிய நிலையிலுள்ள சந்திரிகாவுக்கு இவ்விடயத்தில் ஐ.தே.க.வின் அனுசரணை கிடைத்தாலும் ஜே.வி.பி.யின் ஒத்துழைப்புக் கிடைத்து விடாது என்பது வெளிப்படை யாகிவிட்டது.

அத்துடன் வரவு-செலவுத்திட்டத்தைத் தயாரிப்பதிலும் ஜே.வி.பி.பெரிய ஒத்து ழைப்பை வழங்கவில்லை. சர்வதேச நாடுக ளையும், நிதி நிறுவனங்களையும் நம்பியே ஆட்சி நடத்தும் சனாதிபதி சந்திரிகாவிற்கு அவற்றை முற்றுமுழுதாக நிராகரிக்கும் ஜே.வி.பி.யை வைத்துக்கொண்டு காலம் தள்ளுவது மிகவும் சிரமமாகவே உள்ளது.

வில்லை. ஏனெனில் இ.தொ.கா. இணைந்த பின்னர் எந்தவொரு விடயத்திற்கும் இன் னமும் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படவில்லை. எனினும் இப்பெரும்பான் மைப் பலத்தைப் பயன்படுத்தி சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை ஒன்றைக் கொண்டுவர எடுத்த முயற்சி கிடப்பில் போடப்பட்டுவிட்டது போலவே தெரிகின் றது. இந்த முயற்சிக்கு இ.தொ.கா. ஆதர வளிக்கமாட்டாது என விடுக்கப்பட்ட அறி விப்பே இதற்குக் காரணமாகும்.

இது நினைத்தமாதிரி எதனையும் பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் இப்பொழுதும் நிறைவேற்றி விட முடியாது என்பதையே காட்டுகிறது. அதாவது இப்பொழுதும் கூட எதிர்க் கட்சி யினரின் அனுசரணையுடன் பிரேரணை களை நிறைவேற்றவேண்டிய சுதந்திர நிலையிலுள்ள அரசாங்கத்தைப்போலவே மக்கள் ஐக்கிய முன்னணி செயற்பட வேண்டியுள்ளது.

இதற்குஇ.தொ.கா. மட்டும்தான் கார ணம் என்றல்ல. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளியான ஜே.வி.பி. மட்டுமல்ல சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் காணப்படும் பிளவுகளும் கார ணங்களாக அமைகின்றன.

ஜே.வி.பி.யைப் பொறுத்து அது ஆளுங் கட்சி மட்டுமல்ல பிரச்சினைக்குரிய-சிறிதும் விட்டுக்கொடுக்காத எதிர்க்கட்சி போலவே செயற்பட்டு வருகின்றது. இன்று சந்திரிகா அரசாங்கம் எதிர்நோக்கிவரும் முக்கிய நெருக்கடி நிதிநிலைமையாகும். சனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தை 2001 பொதுத் தேர்தலில் இழந்தபோது சிறிலங்காவின் நிதி நிலைமை மிகவும் மோசமான கட்டத் திலேயே இருந்தது. அதாவது ஏழு வரு டங்கள் தொடர்ச்சியான யுத்தத்தின் விளை வாக அது பாரிய நிதி நெருக்கடியைச் சந்தித்து நின்றது. அடுத்தடுத்துச் சந்தித்த இராணுவத் தோல்விகள் யுத்தத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியாத கட்டத்திற்குத் தள்ளியதுடன் இதன் விளை வாகப் பொருளாதார நிலையும் மிக மோசமான நிலைக்குச் சென்றது. பொருளா தார வளர்ச்சி மறைப் பெறுமானத்திற்கு-வீழ்ச்சி நிலைக்குச் சென்றது. எனினும் இரண்டு வருட கால சமாதான முயற்சிகள் காரணமாக பொருளாதாரத்தில் சற்று மேம் பட்ட நிலை தோன்றினாலும், அது மிக உறுதியானதாக மாறிவிடவில்லை.

அதாவது ஆட்சியை கைப் பற்றுவதற்



இலங்கைக்குக் கிடைக்கவிருந்த 4500 கோடி டொலர் நிதி உதவியைத் தள்ளிப் போட்டிருக்கிறது. இப்பொழுது சில நாடு கள் சில உதவிகளைச் செய்ய முற்பட்டி ருப்பினும் அவை இவ் உதவிக்கு ஈடாக மாட்டாது என்றே கூறவேண்டும். அத்துடன் வெளிநாட்டு முதலீடுகள். உல்லாசப்பய ணத்துறையும் மந்தநிலையையே அடைந் திருக்கின்றன.

அண்மைக்காலத்தில் 50 முதலீட்டாளர் கள் சிறிலங்காவில் தமது செயற்பாடுகளை நிறுத்திக்கொண்டுள்ளதாகவும் இதில் அனேகமானோர் வெளிநாட்டவர் என்றும் இதனால் சுமார் 50ஆயிரம் பேர் தொழிலை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு யுத்த அபாயம் குறித்து விடுக்கப் படும் எச்சரிக்கைகள் காரணமாக அமைந் துள்ளன. ஆனால் அரசாங்கம் குறுகிய காலக்கெடு விதித்து வழங்கிய வாக்குறு திகள் அதனை நெருக்கடிக்குள்ளாக்கியுள் ளன. சனாதிபதி சந்திரிகாவும், அவரது கட்சியினரும் பிரச்சினைக்குரியவர்கள் எனக்கருதிய வேலையற்ற பட்டதாரிகள் விவகாரம் ஓரளவு தணிந்துபோயுள்ளது. ஆனால் அரசாங்க ஊழியர் சம்பள உயர்வு பெரும் பூதமாகக் கிளம்பக்கூடிய ஏதுநிலை காணப்படுகின்றது.

70 சதவீத சம்பள உயர்வு வழங்கு வதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

இதேவேளை பிந்திக்கிடைத்த செய்திகள் 70 வீத சம்பள அதிகரிப்பு இல்லை. ஆனால் 800 ரூபா அளவில் சம்பள அதி கரிப்பு வழங்கப்படும் எனக்கூறுகிறது. இது ஊர்ஜிதமற்ற தகவல் ஆயினும் சம்பள மீளாய்வு ஆணைக்குழுத்தலைவர் திஸ்ஸ தெய்வேந்திரா 70 வீதசம்பள உயர்வு அனைத்து மட்டத்திலும் வழங்கப்படுவது இயலாத காரியம் எனக்கூறுயிருக்கிறார்.

மற்றொரு விடயம் அரச நிறுவனங் களைத் தனியார் மயமாக்கல் இவ்விடயம் கைவிடப்படும் எனத் தேர்தல் காலத்தில் வாக்குறுதியாக வழங்கப்பட்டது. ஆனால் ஊழியர்கள் இதில் நம்பிக்கையற்றவர் களாகவே உள்ளனர். உடனடியாக பெற் றோலியக் கூட்டுத்தாபனத்தை இந்திய நிறு வனம் ஒன்றுக்கு வழங்குவது தொடர்பான செய்திகள் அவ் ஊழியர் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் அடையாளப் போராட்டங்களை நடத்திவிட்டு உறுதியான முடிவுக்குக் காத்திருக்கின்றனர்.

இங்கு முக்கிய விடயம் என்னவென் றால் தொழிலாளர் போராட்டங்கள் சில வற்றின் பின்னணியில் ஜே.வி.பி. இருப்ப தாகும். இது அக்கட்சி ஆளும் கட்சியா? எதிர்க்கட்சியா? என்ற கேள்வியை எழுப் பியிருக்கிறது.

இதேவேளை மிகமுக்கியமான விவகா ரத்தின் காரணமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தோன்றியுள்ள முரண்பாடு இன்று வெளித்தெரியத் தொடங்கியுள்ளது. அதாவது சந்திரிகாவுக்குப் பின் தலைமை யாருக்கு என்பது என்ற போட்டியாகும். இதில் பிரதான போட்டியாளர்கள் மகிந்த ராஜபக்ஷவும் அநுரா பண்டாரநாயக்கவுமே. ஆனால் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவும் இதற்குள் இழுத்து விடப்பட்டிருக்கிறார்.

இப்போட்டி கட்சிக் கட்டடத்திற்கு நாட்டப் பட்ட அத்திவாரக்கல்லைப் பிடுங்கி எறியுமள விற்குச் சென்றுள்ளது. இது பல பரிமாணத் தில் மகிந்தராஜ பக்ஷவின் பாதுகாப்பிற் கான அச்சுறுத்தலாகவும் உள்ளது.

இந்தப்போட்டியைப் பார்க்கும்போது சந் திரிகா தொடர்ந்தும் அரசியலில் இருக்கக் கூடியதாக அரசியலமைப்பில் மாற்றம் செய்வது எனும் விடயத்தின் சாத்தியம் குறித்து சந்தேகம் எழுகின்றது. அவ்வாறு சந்திரிகா முயற்சிப்பாராயின் கட்சியின் உறுதிப்பாடு குறித்து அவர் நம்பிக்கை யுடன் இருக்க முடியாது. ஆனால், அவ்வா றான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முயற் சியை இப்பொழுதுஅவர் கைவிட்டுவிட்ட தாகவும் கருதமுடியாது.

அவ்வாறு கைவிட்டுவிட்டால் அடுத்த முயற்சியாக அநுராவைத் தலைமைக்குக் கொண்டுவருவதாகவே இருக்கும். இதுவும் சுலபமாக நிறைவேறிவிடக் கூடியதல்ல. அதாவது அரசியலமைப்பில் மாற்றம் ஏற்படுத்துவதைவிட இது மிகக் கடினமான விடயமாகும். இவற்றையெல்லாம் பார்க்கும் போது இ.தொ.கா.இணைந்து கொண்டதால் கிட்டிய பெரும்பான்மை எவ்வளவு காலத் திற்கு நீடிக்கும்? சனாதிபதியின் பதவிக் காலம் அடுத்த ஆண்டுடன் முடிவுறவுள்ள நிலையில் இப்பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காணப்படவேண்டும்.அதாவது பொருளா தார நிலையில் மாற்றம் ஏற்பட்டு ஓர் உறுதி யான நிலை தோன்றாதவரை ஆட்சியை நிலை யானது என்க்கூறிவிட முடியாது. ஆனால் இவ்வாறான முரண்பாடுகள் காரணமாக ஆட்சி கவிழுமாயின் பின்னர் சு.க.மீண்டும் 1977 நிலைக்கே செல்ல வேண்டிவரும்.

**வேலவன்**

---

## நெற்செய்கைக் கூட்டம்

2004-2005 ஆம் ஆண்டுக்கான கோட்டைகட்டியகுளம், அம்ப லப்பெருமாள்குளம் , தென்னியங்குள காலபோக நெற்செய்கைக்கான கூட்டம், கோட்டைகட்டியகுளம், பாடசாலை மண்டபத்தில் நேற்று முன் தினம் பி.ப. 2.30 மணிக்கு முல்லை மாவட்ட அர சாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் இடம் பெற்றது. இதில் நெற்செய்கைக்கான கால அட்டவணைப் படுத்தலும் அபிவிருத் திக்கான முன்னோடிகளும் கேள்விகளும் சமகால அரசியல் கருத்துக் களும் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் முல்லை. மாவட்ட நீர்ப்பாசன பிரதித்திட்டப் பணிப்பாளர் சிவகுமார், வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் தவக்குமார், முல்லை மாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம், முல்லை.மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பூங்குன்றன்,முல்லைமாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சின்னண்ணன் ,உதவி அரசாங்க அதிபர்நந்தகுமார் ,விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர். நிகழ்வில் விவசாயிகள். பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (24)

## கொழும்பில் போக்குவரத்துக்கு இடையூறான கட்டடங்களை அகற்ற நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பில் வீதிகளுக்கு இடையூறாக அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை அகற் றும் விசேட திட்டம் நேற்று முன் தினம் ஆரம்பமாகியுள்ளது.

மக்கள் இடையூறின்றி பயணம் செய்யக் கூடியவகையில் நகரை மாற்றியமைப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கம் என்று கொழும்பு பிரதிமேயர் கூறியுள்ளார்.

ஐந்து பொலிஸ் நிலையங் களை கேந்திரமாக கொண்டே இந்த செயற்றிட்டம் நேற்று முன் தினம் காலை ஆரம்பிக்கப்பட் டுள்ளது. புறக்கோட்டை, கொட் டாஞ்சேனை மருதானை கொம்பனி தெரு, நாரகன்பிட்டி ஆகிய பிர தேசங்களில் அமைந்துள்ள சட்ட விரோத கட்டிடங்களை அகற்றும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

அனுமதிப்பத்திரம் வழங்கப் பட்டுள்ள நடைபாதை விற்பனை நிலையங்கள் அகற்றப்பட மாட்டாது என்றும் அவர் தெரி வித்துள்ளார்.ஏனைய சட்ட விரோத விற்பனை நிலையங்கள் குறித்து மதிப்பீடு பின்னர் மேற்கொள்ளப் பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# சிறிலங்காவில் 40 ஆயிரம் குற்றவாளிகள் விசாரணையின்றி உலாவுகின்றனர்

## – இரசாயன பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரி தகவல்

**சிறிலங்காவில் சுமார் 40 ஆயிரம் குற்றவாளிகள் எவ்வித விசாரணைகளும் இன்றி உலவுவதாக தெரியவந்துள்ளது. கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தில் கணினி வசதிகள் இல்லாமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தகவல் வெளியிடப்பட்டது.**

திணைக்கள பதிவாளர் அபேரட்ண இது தொடர்பில் நீதிமன்றத்தில் தகவல் வெளியிட்ட போது, குற்றங்கள் தொடர்பாக சுமார் 40 ஆயிரம் பேரது கைவிரல் அடையாளங்கள் பதியப்பட வேண்டியுள்ளன. எனினும் கடந்த 10 வருடங்களாக கணினி வசதிகள் இன்மையால் அவற்றை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாக குறிப்பிட்டார்.

இது வரை நாடளாவிய ரீதியிலான நீதிமன்றங்களில் இருந்து சுமார் 4 இலட்சம் கைவிரல் அடையாளங்கள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த அடையாளங்களிலேயே சுமார் 40 ஆயிரம் வரையில் கடந்த 10 வருடங்களாக பதியப்படாமல் இருந்து வருவதாகவும் அபேரட்ண தெரிவித்தார். (32)

# -சிங்கள மக்களின் மத்தியில்- புலிகளின் நிலைப்பாட்டை விளக்க இடதுசாரிகள் உதவியை நாடல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி தொடர்பில் தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் தெளிவுகளை ஏற்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிங்கள இடதுசாரி கட்சியினரை நாடியுள்ளது.

இதன் அடிப்படையில் சனநாயக இடதுசாரிமுன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார மற்றும் நவ சமசமாஜக்கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோரின் உதவி பெறப்படவுள்ளது.

இது தொடர்பில் விக்கிரமபாகு கருணாரட்ணவுடன் தொடர்பு கொண்ட போது தாம் நாட்டில் சமாதானம் நிலைபெறுவதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார். (32)

# சட்ட விரோத ஆயுதங்களை அரசு கொள்வனவு செய்யும்

## - தப்பியோடிய சிப்பாய்களிடம் அதிக ஆயுதங்கள்

(கொழும்பு)

நாட்டில் மறைத்து வைக்கப்பட்டு குற்றச்செயல்களுக்காக பயன்படுத்தப்படுவதாக கூறப்படும் சுமார் 35 ஆயிரம் ஆயுதங்களை விலைக்கு கொள்வனவு செய்யப்போவதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை களுத்துறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், நாட்டில் குற்றச்செயல்களுக்காக பயன்படுத்தப்படும் ஆயுதங்களை பறிமுதல் செய்ய வேண்டியது அவசியமானதாகும், அதனை பலாத்காரமாக மேற்கொள்ளாமல் ஆரம்பத்தில் குறிப்பிட்ட விலைக்கு கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். நாட்டில் படைகளில் இருந்து தப்பி வந்த சுமார் 50 ஆயிரம் பேரிடம் அதிகமான சட்டவிரோத ஆயுதங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.(32)

# பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் பாரஊர்திச் சாரதி காயம்

புத்தளம் செம்மனதழுவப் பகுதியில் .நேற்றுமுன்தினம் காலை பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்து புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காலை 6.35மணியளவில் சோதனைச் சாவடியில் நின்றிருந்த பொலிசார் சட்ட விரோதமாக தேக்கு மரங்களை ஏற்றிச் சென்ற பார ஊர்தி ஒன்றை நிறுத்துமாறு உத்தரவிட்ட போதும், அது நிறுத்தப்படாமல் செல்லவே அதன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் தலையில் காயமடைந்த பார ஊர்தியின் சாரதி புத்தளம் வைத்தியசாலையில் அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி வேயகொடபொல தெரிவித்தார்.

அதேநேரம் பாரஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்ட ஒருஇலட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியைக் கொண்ட தேக்கு மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (32)

# அப்துல் காதர் மீதான பிணைமனு விசாரணை

(கொழும்பு)

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் அப்துல் காதரின் பிணை கோரிய மனு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது தம்மைக் கைது செய்த போது அத்துமீறி நடந்து கொண்டதாக கூறி, பிரதிவாதியாக மனுதாரர் அப்துல் காதரால் குறிப்பிடப்பட்டுள்ள குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரியை மன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. அப்துல் காதர் 10 இலட்சம் ரூபா சமுர்த்தி நிதியை பிழையான வழியில் கையாண்டார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார். (32)

# 50 தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டதால் 50 ஆயிரம் பேர் தொழிலிழப்பு!

சிறிலங்காவில் சுமார் 50 நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டமையால் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தமது தொழில்களை இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் பெரும்பாலும் வெளிநாட்டு நிறுவனங்களே தமது நடவடிக்கைகளை இடையில் நிறுத்திக் கொண்டுள்ளன.

இதனையடுத்து நிலைமையை ஆராயவென அமைச்சரவை உபகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் முக்கிய பணி மீண்டும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை இலங்கைக்கு வரவழைத்து நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாகவே இருக்கும் என தொழிலமைச்சர் அத்தாவுட செனவிரட்ன தெரிவித்தார். அரசாங்கம் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் அதேநேரம் தொழில்களைப் பாதுகாக்கும் திட்டத்தையும் கவனத்தில் கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (32)

# அரச ஊழியர்களின் விடுமுறை நாட்களைக் குறைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

பௌர்ணமி விடுமுறைகளைத் தவிர்த்து அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கும் ஏனைய விடுமுறை நாட்கள் குறைக்கப்படவுள்ளதாக அரச தேசிய பரிபாலன சபை அமைச்சர் அமரசிறி தொடங்கொட அறிவித்துள்ளார்.

மூன்றில் ஒரு பங்கு விடுமுறை அரச ஊழியர்கள் பெறுவதால் அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு நாட்டிற்கு பெரும் பின்னடைவை உண்டு பண்ணும் எனவும் மலேசியா, இந்தியா, சிங்கப்பூர், பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் முறையே 15,17,21,12,8, வருடத்தில் அரச விடுமுறைகள் உள்ளதென்றும் எமது நாட்டில் அது 28 ஆக அதிகரித்துள்ளதாகவும், அதனால் எமது நாடு தற்போது பொருளாதாரத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளதென அமைச்சர் தொடங்கொட தெரிவித்துள்ளார்.

# - விசேட செயற்றிட்டத்தின் கீழ் - உயர்தரத்தில் சித்திபெற்றோருக்கு தொழில் வழங்கப்படமாட்டாது

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் சித்தி பெற்றவர்களுக்கு தொழில் வழங்க விசேட செயற்றிட்டங்கள் உருவாக்கப்பட மாட்டாது என்று நிதியமைச்சின் செயலாளர் ஜெயசுந்தர கூறியுள்ளார்.

ஆனால் உயர்தரத்தில் சித்தி பெற்றவர்களுக்கு வெவ்வேறான அமைச்சுக்களினூடாக தொழில் வழங்கும் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று கூறியுள்ளார்.

அமைச்சுக்களிலுள்ள வெற்றிடங்கள் குறித்து வர்த்தக மானியில் அறிவிக்கப்படும். இதன்பின்னர் உயர்தரத்தில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று நிதியமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

தற்போது அமைச்சுக்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

# தரமற்ற உரம் உற்பத்திசெய்யும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

தரமற்ற பசளைகளை இந்நாட்டில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் நிறுவனங்களை தடைசெய்வதுடன் அந்நிறுவனங்களின் சொத்துக்களை அரச மயமாக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள இருப்பதாகவும் அவைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்யும் வியாபாரிகளைக் கைது செய்து தண்டனை வழங்கப் போவதாக அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

# அமைச்சுப் பொறுப்புக்கள் மாற்றம்; சனாதிபதி-பிரதமருடன் பேச்சு!

## - ரட்நாயக்கவிற்குப் புதிய அமைச்சு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தில் இணைந்தமையை அடுத்து, பதவியிழந்துள்ள சி.பி.ரடநாயக்கவுக்கு நேற்றுமுன்தினம் மத்திய மற்றும் சிறிய பெருந்தோட்டக்கைத்தொழில் கிராமிய மனிதவள அபிவிருத்தி அமைச்சு வழங்கப்பட்டது. அமைச்சுப் பொறுப்புக்களை மாற்றியமைப்பது தொடர்பாக சனாதிபதி பிரதமரைச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகளை நடத்தியிருந்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதையடுத்து வழங்கப்பட்டுள்ள ஒரு அமைச்சுப் பதவியையும், ஒரு பிரதியமைச்சுப் பதவியையும் அடுத்து ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்காகவே சனாதிபதி பிரதமருடன் கலந்தாலோசனை ஒன்றை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# இலஞ்சம் பெற்ற அதிபர் பொலிசாரால் கைது

கொழும்பு)

இலஞ்சம் மற்றும் ஒழுக்கமின்மை காரணமாக சிறிலங்காவின் உயர் பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். வடமேல் மாகாண சபையைச் சேர்ந்த குறித்த பாடசாலையின் அதிபர் சிறார்களைப் பாடசாலையில் அனுமதிப்பதற்காக பெற்றோரிடமிரு ந்து பெருந்தொகைப் பணத்தைக் கடந்த சில வருடங்களாக அறவிட்டுவந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது இந்த அதிபரின் வங்கிக்கணக்குகள் மற்றும் ஆவணங்கள் என்பன நுட்பமான சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்பே இவர் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுத் தலைவர் கூறியுள்ளார்.

## நிபந்தனை

(கொழும்பு)

சுகாதார வேலை நிறுத்தங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இடைக்காலக் கொடுப்பனவாக ரூபா 5000 வழங்கினால் தற்பொழுது நடைபெறும் தொழிலாளர் போராட்டத்தை நிறுத்துவோம் என தேசிய வைத்தியக் கூட்டுறவு சம்மேளன சங்கம் சிறிலங்காவின் சுகாதார அமைச்சுக்குத் தெரிவித்துள்ளது.




**அன்னை வேளாங்கன்னி ஆலய திருநாள்**
**அளம்பீல் கடற்கரை**
**21-09-2004**

20.09.2004 மாலை 5.30 மணிக்கு திருப்பலியும், நற்கருணை வழிபாடும் பவனியும் ஆசீரும் இடம் பெறும்.

21.09.2004 காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும், பவனியும், ஆசீரும் இடம்பெறும்.

அன்னை அருள்பெற அனைவரையும் அன்புடன அழைக்கின்றோம்.

பங்குமக்களும்,
பங்குத்தந்தையும்

(4692)

# ஐ.நா.வில் நிரந்தர அங்கத்துவம் இந்தியப் பிரதமர் வலியுறுத்துவார்

(புதுடில்லி)

**இந்தியாவிற்கு ஐ.நா.சபையில் நிரந்தர அங்கத்துவம் கோரி ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் உரையாற்றவுள்ளார்.**

எதிர்வரும் 23ஆம் திகதி பொதுச்சபைக்கூட்டத்தில் உரையாற்றவுள்ள மன்மோகன்சிங் மேலும் தனதுரையில் சர்வதேச அளவில் பயங்கரவாதத்தை ஒழிப்பதுபற்றியும், உலக பொருளாதார நிலமை பற்றியும், சர்வதேச வர்த்தகம் குறித்தும் குறிப்பிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மன்மோகன்சிங்கின் இப் பயணத்தின்போது வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் திட்டக்குழுத்துணைத் தலைவர் மோன் பக்சிங், பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்சிற் உட்பட மிகப்பெரும் தூதுக்குழுவும் செல்லவுள்ளது.

# புலிகளுடன் பேசித்தீர்க்க முயல்வது போல் நக்சலைட்டுக்களுடன் பேசித்தீர்க்க முடியும்!

## கர்நாடக அமைச்சர் சிந்தியா

(பெங்களூர்)

விடுதலைப் புலிகளுக்கு இணையான வலுவான அமைப்பு உலகில் வேறு எங்கும் இல்லை. விடுதலைப் புலிகள் அமைப்பு அனைத்துலக அளவில் ஆதரவைப்பெற்றுள்ளது. இருப்பினும் அந்த அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கையில் நடக்கும் போராட்டத்திற்குத் தீர்வுகாண அந்நாட்டின் அதிபர் சந்திரிகா முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

அதேபோல்தான் கர்நாடகாவில் நக்சலைட்டுக்கள் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அரசு முடிவு செய்துள்ளது என கர்நாடக அமைச்சர் சிந்தியா தெரிவித்தார்.மேலும் அவர் மேற்கு வங்கம். ஒரிசா ஆந்திராவில் பேச்சுவார்த்தை மூலம்தான் நக்சலைட்டுக்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டு உள்ளது என்றார்.

வீரப்பனைப் பிடிக்க பொலிசார் பயன்படுத்தப்பட்டனர். பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.. ஆனால் அதில் வெற்றிபெற முடியவிலலையே. வீரப்பனைப் பிடிப்பதில் தோல்வி அடைந்ததில் எனக்கும் பங்கு உண்டு என்பதை நான்ஒப்புக்கொள்கிறேன். வீரப்பனையும் நச்சலைட்டுக்களையும் ஒப்பிடுவது சரியல்ல. வீரப்பன் கிரிமினல் எனவும் தெரிவித்தார்.

# தமிழகத்திற்கு ஒரு சொட்டு தண்ணீரும் தரமாட்டோம்!

ஒரு சொட்டுத் தண்ணீரைக் கூட தமிழ்நாட்டிற்குத் தர மாட்டோம் என கேரள நீர்வளத்துறை அமைச்சர் திருவாங்கூர் ராதாகிருஷ்ணன் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

கேரள நதிகளில் இருந்து ஒரு சொட்டுத் தண்ணீரைக் கூட பிற மாநிலங்களுக்குத் தாரை வார்க்க மாட்டோம். தமிழக அரசின் அனைத்து இரகசிய முயற்சிகளையும் கேரள அரசு முறியடிக்கும். இதற்காக கேரள-தமிழக எல்லைகளில் நிரந்தரமாக நதிநீர்க் கண்காணிப்பாளர்களை நிறுத்தவும் திட்டமிட்டு வருகின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# மன்மோகன்சிங்–முஷாரப் நியூயோர்க்கில் சந்திப்பு

(டில்லி)

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நியூயோர்க்கில் 21ஆம் திகதி பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பைச் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள அமெரிக்கா செல்லும் இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்இவ் விஜயத்தின் போதே முஷாரப்பை சந்தித்துப்பேசவுள்ளார்.



தமிழை செம்மொழி ஆக்கி அரசாணை வெளியிட மத்திய அமைச்சரவை முடிவு எடுத்ததை ஒட்டி பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு நன்றி தெரிவித்து தமிழகத்தை சேர்ந்த மத்திய அமைச்சர்கள் மலர்க் கொத்து வழங்கினர். ப.சிதம்பரம், தயாநிதி, மாறன், ஆராசா, அன்புமணி, பழனிமாணிக்கம் ஆகியோர் படத்தில் உள்ளனர்.

# தண்ணீர் இன்மையால் தமிழகம் பெரும் அவதியுற்று வருகிறது!

## பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வை.கோ. முறையீடு

தமிழக விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தண்ணீர் இல்லாமல் பெரும் துயரத்திற்கு ஆளாகி வருகின்றனர் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நேரில் முறையிட்டார் ம.தி.மு.க.பொதுச் செயலர் வை.கோ. தமிழகத்தின் துயரம் தீர, தென்னக நதிகளை இணைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுஇவர் வலியுறுத்தினார்.அது பற்றிய சாத்தியக்கூறு அறிக்கையை விரைவில் தயாரிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக பிரதமர் அவரிடம் தெரிவித்தார்.

கடந்த 15ஆம் திகதி தனது நடைப்பயணத்தை முடித்த வை.கோ, ஒரு நாள் ஓய்வுக்குப் பிறகு உடனடியாக டில்லி வந்தார். வியாழக்கிழமை மாலை பிரதமரைச் சந்தித்து 25 நிமிடம் ஆலோசனை நடத்தினார். தமிழகம் முழுவதும் பொது மக்கள் குடிநீருக்காகப் படும் துயரம் சொல்ல முடியாத அளவுக்கு உள்ளது. குறிப்பாக கிராம மக்கள் ஒரு குடம் நீருக்காக நீண்ட தொலைவு நடக்க வேண்டியுள்ளது 90 வீத மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. விவசாயிகள் பாசனம்செய்யத்தண்ணீர் இல்லை. அவர்கள் தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. தமிழகத்தில் நிலத்தடி நீர் நிலைமை மோசமாக இருக்கின்றது. எனவே, நதிகளை இணைக்கவும் தேசியமயமாக்கவும் மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் தமிழகமே அழிந்து விடும். ஆந்திரம் ஒரிஸாவைப் போல தமிழகத்திலும் பட்டினிச் சாவுகள் ஏற்படுமென்று வை.கோ சுட்டிக் காட்டினார். இதற்குப் பதிலளித்த பிரதமர் நதிநீர் இணைப்புத் திட்டம் குறித்து அதிகாரிகளை அழைத்து ஆலோசனை நடத்தினேன். அது குறித்த சாத்தியக் கூற்று அறிக்கை தயாரிப்பதை விரைவுபடுத்துமாறு உத்தரவிட்டிருக்கிறேன் என்றார்.

## யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பவளவிழா நடைபவனி

**காலம் : 21.09.2004 செவ்வாய்க்கிழமை, காலை 08.00 மணி**

**பிரதம அதிதி : பேராசிரியர் கலாநிதி கூ.மோகனதாஸ்**

(துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்)

இந்தப் பவனியில் பெற்றோர், வித்தியாலய பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

(சீ.10458)



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் நளினி தனது தம்பி பாக்கியநாதன் திருமணத்துக்காக பொலிஸ் பாதுகாப்புடன் பரோலில் சென்னை தி.நகர் தியாகராயர் அரங்கத்துக்கு வந்த போது எடுத்தபடம்



## வீரச்சாவு அறிவித்தல்

## லெப்டினன்ட் நாதன்

தாயின் மடியில்: 30.07.1977
தாயக மண்ணில்: 02.12.1995

முத்துக்குமாரசாமி சசிகுமார்
புங்குடுதீவு

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட லெப்டினன்ட் நாதன் (சசிகுமார்) கடந்த 02.12.1995 இல் யாழ்.ஸ்ரான்லி வீதியில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்துள்ளார். அன்னார் முத்துக்குமாரசாமி சோதிமலர் (சற்குணம்) (ஜேர்மன்) ஆகியோரின் அருமை மகனாரும் புஸ்பா, சுகுமார் (ஜேர்மனி) சசிலா (சுவிஸ்), பாலகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகசுந்தரம் (ஜேர்மன்), கண்ணதாசன் (சுவிஸ்), ராணி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், போராளி கனித்தமிழின் உடன்பிறவாச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் திருவுருவப்படம் 2 ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பில் உள்ள அவரது சித்தப்பா சித்தியான கிருஷ்ணமூர்த்தி வசந்த மலரின் இல்லத்தில் 19.09.2004 ஞாயிறு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 20 ஆம் திகதி திங்கள் பகல் 10 மணிக்கு விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் நாட்டப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
த.கிருஷ்ணமூர்த்தி (சித்தப்பா), 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

(சீ.9198)

ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004 · International Cricket Council · ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004 · International Cricket Council · ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004

# பிளின்டொப் அபார துடுப்பாட்டம், பந்து வீச்சு
# அரையிறுதி வாய்ப்பைப் பெற்றது இங்கிலாந்து



ஐ.சி.சி மினி உலகக்கிண்ணத்துக்கான சிறிலங்கா-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி மழையால் நேற்றும்தடைப்பட இங்கிலாந்து அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓட்ட விகிதம் மற்றும் விக்கெட் கையிருப்பைக் கொண்டு இங்கிலாந்து அணிக்கு இம் முடிவு அறிவிக கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இங்கிலாந்து அணி அரையிறுதியில் அவுஸ்திரேலிய அணியை எதிர் கொள்கிறது.

காரணம் சிம்பாப்வேக்கு எதிராக சிறிலங்கா அணி பெற்ற வெற்றி . இங்கிலாந்துடன் ஒப்பிடும் வகையில் பெரிய வெற்றியாக அமையவில்லை. சிம்பாப்வேக்கு எதிராக இங்கிலாந்து மிகப் பெரிய வெற்றியை பெற்றதால் சிறிலங்கா அணி இங்கிலாந்தைவெற்றி பெறும் பட்சத்திலேயே அடுத்த சுற்றுக்குத் தெரிவாகும் நிலையில் இருந்துள்ளது.

நேற்று முன்தினம் 32 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களை பெற்றிருந்த இங்கிலாந்து அணி நேற்று தொடர்ந்து



ஆடி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 251 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் 91 பந்துகளை எதிர் கொண்டு பிளின்டொப் 104 ஓட்டங்களையும், கொலிங்வூட் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

கடைசி 17 ஓவர்களில் 130 ஓட்டங்கள பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 33 ஓவர்களில் 123 ஓட்டங்களையே இங்கிலாந்து பெற்றிருந்தது.

பதிலுக்கு ஆடிய சிறிலங்கா அணி 24 ஓவர்களில் 95 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலையில் இருந்தது.

இதில் ஜெயசூரியா வெற்றி இலக்கைநோக்கி அதிக பட்சமாக 27 ஓட்டங்களையும், ஜெயந்த 23 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். சங்கக்கார, டில்சான் ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர். பந்து வீச்சில் ஹார் மிசன், பிளின்டொப் தலா 2 விக்கெட்டுக்களையும், ஹைல்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

### தென்னாபிரிக்க-மே.இ.தீவுப்போட்டி இன்று தொடரும்

இதே வேளை மற்றுமொரு குழு'பி'க்கான தென்னாபிரிக்கா-மேற்கிந்திய தீவுகளுக்கிடையிலான போட்டியும் மழையால் கைவிடப்பட்டு இன்றைய தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில 6 விக்கெட்டுக்ளை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கடந்த சில மாதங்களாக பிரகாசிக்க தவறிய கிப்ஸ் 101 ஓட்டங்களையும் ருடெல்ப் 46 ஓட்டங்களையும், சிமித் 45 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர்.

மேற்கிந்தியத்தீவால் ஆறு ஓட்டங்கள் மாத்திரமே உதிரிகளாக விட்டுக் கொடுக்கப்பட்டது.

ஏற்கனவே ஒரு காலிறுதிப்



போட்டி மாத்திரம் பூரணமாக நடைபெற்றுள்ள நிலையில் மேற்படி போட்டி இன்று நடைபெறு மென அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இன்றும் மழை போட்டியில பாதிப்பை



ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் இன்று நடை பெறவுள்ள பாகிஸ்தான்-இந்திய அணிகளுக்கிடையிலான முக்கியமான போட்டியும் மழையால் தடைப் படும் என அறிவிக்கப் படுகிறது.

எனவே இரண்டாவதாக அரையிறுதிக்கு முன்னேறப் போகின்ற அணி எது? கிண்ணத்தைக் கைப் பற்றப் போகின்ற அணி எது என் பதையும்பொறுத்திருந்து பார்ப் போம்.

## கிண்ணத்தைக் கைப்பற்ற அவுஸ்திரேலியாவுக்கே அதிகவாய்ப்பு உள்ளது-ஸ்ரீபன் பிளெமிங்



'மினி உலகக்கோப்பையை அவுஸ்திரேலியா வெல்லும் என நியூசிலாந்து அணித்தலைவர் ஸ்ரீபன் பிளமிங் கூறியுள்ளார்.

4 ஆவது மினி உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி இங்கிலாந்து நாட்டில் நடைபெற்று வருகிறது.

12 நாடுகள் பங்கேற்கும் இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி அபாரமாக ஆடியது. வலுவான எதிரணிக்கு எந்த ஒரு வாய்ப்பும் கொடுக்காமல் ஆடியவிதம் அவுஸ்திரேலியாவை எதிர்கொள்வது எளிதான காரியம் அல்ல என்பதை எதிரணிகளுக்குச் செயலில் எடுத்துரைப்பதாக இருந்தது.

இந்த நிலையில் அவுஸ்திரேலியாவிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்து ஆட்டத்தை விட்டு வெளியேறிய நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்டீபன் பிளமிங், இந்த மினி உலகக் கோப்பையை "அவுஸ்திரேலியா வெல்லும்" என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக பிளமிங் கூறுகையில்," மினி உலகக் கோப்பையை அவுஸ்திரேலியா வெல்ல அதிக வாய்ப்பு உள்ளது. அதில் எந்தவித சந்கேமும் இல்லை. பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கு சிறிய வாய்ப்பு உள்ளது. எதிர்பாராதவிதமாக முதல் 20 ஓவர்கள் எங்களது ஆட்டம் மிகவும் மோசமாக இருந்தது. அதுவே தோல்விக்கு காரணமாகும். அவுஸ்திரேலியாவை வெல்ல வேண்டும் என்பதில் ஆர்வமாக உள்ளோம்" என்றார்.

## வீரர்களின் நூறு வீத பங்களிப்பே வெற்றி நடை தொடர உதவுகிறது

### பொண்டிங்

"அவுஸ்திரேலிய வெற்றி நடையில் களத்தடுப்பு பெரும் பங்கு வகிக்கிறது. இந்தத்துறையில் சிறப்பாகச் செயற்பட்டதால் தான் 2003 இல் உலக கோப்பையைக் கைப்பற்ற முடிந்தது. தவிர வீரர்கள் எந்தப் பகுதியிலும் களத்தடுபபைச் செய்யக்கூடிய திறமைமிக்கவர்களாக இருப்பது அணியின் மிகப் பெரியபலம்" என்றார் பொண்டிங்.

கிரிக்கெட்டில் ஒவ்வொரு கால கட்டத்திலும்




ஏதாவது ஒரு அணி அவுஸ்திரேலியாவுக்கு போட்டியாக எழுச்சி காணும். இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற அணிகள் சவாலாக விளங்கினாலும் கூட முதல் இடத்தை மட்டும் பெற இயலவில்லை. உலக சம்பியனான அவுஸ்தி ரேலியா நீண்ட காலமாக முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. அணியின் வீரர்கள் அனைவரும் சிறப்பாகச் செயற் படுவதால்தான் இந்தத் தொடர் வெற்றி சாத்தியமாகிறது என்று விளக்கம் தருகிறார்அணித்தலைவர் பொண்டிங். இவர் கூறியதாவது, அணியில் உள்ள 11 பேரும் நூறு சதவீத திறமையை வெளிப் படுத்துவதால் தான் வெற்றி நடையைத் தொடர முடிகிறது. ஒரு சிலர் மோசமாக செயற்பட்டாலும் கூட



வெற்றி மறைந்து தோல்வி தொற்றிக் கொள்ளும். வெற்றிக்கு சிறப்பான களத்தடுப்பு முக்கியகாரணம். 2003 உலகக் கோப்பைப் போட்டியில் களத்தடுபபே, கோப்பையைப் பெற்றுத் தந்தது.

மினி உலகக் கோப்பையில் நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் அணியில் உள்ள அனைவரும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினர். துவக்கத்தில் மெக்ராத் மோசமாகப் பந்து வீச, 'மாற்றி விடலாம் என்று யோசித்தேன். ஆனாலும் விரைவாகத் தவறைத் திருத்திக் கொண்ட இவர் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி திருப்பு முனையை ஏற்படுத்தினார். அரையிறுதியில் சந்திக்க இருக்கும் அணியைப் பொறுத்து பிரெட்லீக்கு வாய்ப்பு அளிக் கப்படும். நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் லீக்குப் பதில் ஷேன்வாடசனைத் தேர்வு செய்ய வேண்டியதாயிற்று. அரையிறுதியில் பிரட்லீக்கு வாய்ப்பு அளிக்கப்படலாம். இவரது அசுர வேகப்பந்து வீச்சு ஏதிரணிக்கு நிச்சயமாகச் சிக்கலை ஏற்படுத்தும். கிலெஸ்பி தவிர காஸ்பரோவிச்சும் இப்போது அபாரமாகப் பந்து வீசுகிறார். துவக்கத்தில் சிறப்பாகப் பந்து வீசும் இவர் கடைசிக் கட்டத்தில் நிதானமாகப் பந்து வீசி நம்பிக்கை தருகிறார். இவ்வாறு பொண்டிங் கூறினார்.

### மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த
## கராத்தே சுற்றுப்போட்டியை முன்னிட்டு கிளி.இல் கராத்தே பயிற்சி வகுப்பு ஆரம்பம்

தமிழீழ கராத்தே சம்மேளனத்தினரால் மேஜர் ஈழப்பிரியா நினைவான கராத்தே சுற்றுப் போட்டியினை முன்னிட்டு தமிழீழத்திலுள்ள எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த கராத்தே வீரர்களுக்குப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்தில் அமைந்துள்ள பயிற்சிக் கல்லூரியில் நேற்று பகல் 10.00 மணிக்கு தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் அ.இன்பன் தலைமையில் ஆரம்பமான இப் பயிற்சி நிகழ்வில், சிறப்புரையினை தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் கி.பாப்பா, தமிழீழ கராத்தே சம்மேளனத் தலைவர் இரத்தின சோதி மாஸ்ரர், இலங்கையின் கராத்தே கலையின் தந்தையான சிகான் பொனி றொபேட்ஸ் ஆகியோர் வழங்கினர்.



இப் பயிற்சி நிகழ்வில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கறுப்புப்பட்டி, மண்ணிறப்பட்டி வீரர்கள் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நடைபெற்று வரும் இப் பயிற்சியில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும், கராத்தே கலையின் தந்தை சிகான் பொனி றொபேட்ஸ் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. மேற்படி பயிற்சியில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் போக்குவரத்து, உணவு, தங்குமிட வசதியினை தமிழீழ விளையாட்டுத் துறையினர் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வெஸ்லிக் கல்லூரியை வீழ்த்தியது மன்னார் சவேரியார் கல்லூரி

மன்னார் புனிதசவேரியார் ஆண்கள் தேசியக் கல்லூரிக்கும் கொழும்பு வெஸ்லிக் கல்லூரிக்கு மிடையில் நேற்று முன்தினம் மன்னார் விளையாட்டரங்கில் நடைபெற்ற கால்பந்து போட்டியில் மன்னார் புனிதசவேரியார் ஆண்கள் தேசியக் கல்லூரி அணி 6-0 என்ற கோல்களால் வெற்றியீட்டியது. (மி)

## சிந்தனைக்கு



சாவுக்கு அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப் பற்றிற்கும் எமது மாவீரர்களுக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 19-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## அக்கறை எந்தளவு?

சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் ஆர்வமாகவுள்ளார்; சனாதிபதி சந்திரிகாவே சமாதானப் பேச்சுவார்த்தைகளை முழுமையாகக் கையாளவுள்ளார் என்பன, போன்ற தகவல்கள் சனாதிபதி தரப்பில் இருந்தும், சனாதிபதி சந்திரிகாவை சந்திப்போர் - அவருடன் கலந்துரையாடுவோரில் ஒரு தரப்பினரிடமிருந்தும் வெளிப்படுத்தப் படுவதுண்டு.

இதனை உறுதி செய்யுமாப்போன்றே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்துப்பேசியபின்னர் தமிழர் தேசியக் கூட்டமைப்புப் பாரளுமன்ற உறுப்பினர்களும் சரி, நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்மும் சரி தெரிவித்துள்ளனர். வேறுசில வெளிநாட்டவரும் இவ்வாறு குறிப்பிட்டதுண்டு.

ஆனால், சனாதிபதி உண்மையிலேயே சமாதானத்தின் மீது ஆர்வம் கொண்டுள்ளாரா? அன்றி சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தம்முடன் தொடர்பு கொள்பவர்களைத் திருப்திப் படுத்தும் வகையில் பேசும் வல்லமை கொண்டுள்ளாரா? என்பது தீர்க்கப்பட வேண்டிய சந்தேகமாகவே உள்ளது. அததோடு , சனாதிபதி சந்திரிகா உண்மையிலேயே சமாதான முயற்சிகளில் ஆர்வம் கொண்டவராக இருப்பின். அவர் சமாதானப் பேச்சுவார்த்தைக்குரிய வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளாரா? பயன்படுத்திக் கொள்ளத்தயாராக உள்ளாரா? என்ற கேள்விகளுக்கும் பதில் அளிக்கவேண்டியதாக இருக்கும்.

ஏனெனில் இன்று பாராளுமன்றத்தில் உள்ள ஜே.வி.பி.யினர் மற்றும் ஜாதிகஹெல உறுமய தவிர (39 +7ஆசனங்கள்) மீதமுள்ள அனைவருமே இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளிப்பதாகவே கூறிக்கொள்கின்றனர். இது வாதத்திற்குத்தானும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டியதொன்றாகவே இருக்கும். ஆகையினால் இதைப்பயன்படுத்தி பேச்சுவார்த்தைகளை ஏன் ஆரம்பிக்க முடியாது? என்ற தர்க்கபூர்வமான கேள்விக்குப் பதிலளிக்க வேண்டிய தேவை சனாதிபதிக்கு உண்டு.

அவ்வாறு இல்லாது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு காலம் தாழ்த்துவாரேயானால் அவர் சமாதானத்தின் மீது எந்தளவில் அக்கறையாக உள்ளார்; சமாதானப் பேச்சுவார்த்தைகளை தனித்துவமாக கையாள முற்படுகின்றார் எனக் கூறுவதில் எத்தனை தூரம் உண்மைத்தன்மை இருக்கும் என்பது கேள்விக்குரியதே.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்து இரண்டு முக்கிய கேள்விகள் அவர்முன்னுள்ளன. ஒன்று ஜே.வி.பி.யினரைக் கூட்டுடன் அரசாங்கத்தைத் தக்கவைத்துக் கொள்வதா? அன்றி ஜே.வி.பி.யின் தீர்மானம் எதுவாக இருப்பினும் அதனைப்புறம் தள்ளி புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதா? என்பனவாகும்.

ஆனால் ஒன்று, ஜே.வி.பி தனது நிலைப்பாட்டை மாற்றாத வரை சனாதிபதி சந்திரிகாவால் மேற்கூறப்பட்ட இரண்டையும் ஒரேநேரத்தில் கையாள்வது சாத்தியப்பாடானதொன்றல்ல. இரண்டில் ஒன்றைத் துறந்தாகவே வேண்டும். அதாவது சமாதானப் பேச்சுவார்த்தையை அன்றி ஜே.வி.பி.யுடனான உறவைத் துறத்தல் வேண்டும்.

ஆனால் இதுவரையில் சனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடானது ஜே.வி.பி.யினரை விடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர் தயாராக இல்லை என்பதையே வெளிப்படுத்துபவையாக இருந்து வந்துள்ளது. அதாவது ஜே.வி.பி.யுடனான கூட்டுடன் அரசாங்கத்தைப் பாதுகாத்தல் என்பதே அவரின் இலக்காக இருந்து வந்துள்ளது.

அதாவது ஜே.வி.பி.யுடனான கூட்டின்மூலம் அரசாங்கத்தைப் பாதுகாத்தல் என்பதன் பின்பாகவே சமாதானப் பேச்சுவார்த்தை இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு என்பது போன்ற விடயங்கள் ஆகும். ஆகையினால் சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினைத்தீர்வில் ஆர்வமாகவுள்ளார். அக்கறையாகவுள்ளார் எனக்கூறிக்கொள்வதில் எத்தனை உண்மையுள்ளது? அதன் பயன்தான் என்ன?

அதாவது சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி.யுடனான கூட்டு அரசாங்கத்தில் முழு அளவிலான அக்கறைகொண்டவராக இருப்பின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அவரின் நிலைப்பாட்டை சமாதானத்திற்கு ஆதரவானதென்றோ இனப்பிரச்சினைத்தீர்வில் அக்கறைகொண்டுள்ளதென்றோ கொள்ள முடியாது. ஏனெனில் அவரின் நிலைப்பாடு சமாதானத்திற்கு ஆதரவானது என்பதைவிட, அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கானது என்ற முடிவிற்கே முதன்மை அளிப்பதாக இருக்கும்

சிறிலங்கா ஆட்சியாளர்களைப் பொறுத்து அவர்கள் அனைவருமே தமது அரசாங்கத்தைக் காப்பதற்கான முயற்சிகளிலேயே ஈடுபடுவதுண்டு. ஆகையினால் இத்தகைய ஆட்சியாளர்களினால் இனப்பிரச்சினைத் தீர்வு காண முடியாது. ஏனெனில் இனப்பிரச்சினை போன்ற பிரச்சினைக்குத் தீர்வு காண அர்ப்பணிப்பும், தியாகசிந்தையும் தேவை. ஆகையினால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் எவருமே அவற்றை என்றுமே வெளிப்படுத்தியதில்லை. அவர்களின் அகராதியில் அரசியல் என்பது அடக்குமுறையும், அதிகாரமும், சுகபோகமும் என்பவை மட்டுமே.

# சிறிலங்காவின் சுகாதார சேவைகள்

# தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது

### சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் சுகாதார சேவைகள் தனியார் மயப்படுத்தப் படமாட்டது என சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இலவச சுகாதார சேவைகளைத் தனியார் மயப் படுத்தல் சம்பந்தமான தீர்மானம் எதனையும் கொண்டிருக்கவில்லையென்றும், சுகாதார சேவையை மேலும் பலமானதாக ஆக்குவதற்கே அரசாங்கம் பொறுப்புடையதாக இருக்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

சுகாதார சேவைகள் தொழிற் சங்கக் கூட்டமைப்பு, அரசாங்கம் சுகாதார சேவையைத் தனியார் மயப்படுத்தப் போவதாகக் கூறி வருகின்றது. இது ஒரு மோசமான பொய்யாகும்.

என்றும் தெரிவித்த அமைச்சர் அரசாங்கத்திற்கெதிரான கற்பனையான குற்றச்சாட்டுக்களை தொழிற்சங்கத் தலைவர்கள் சுமத்தி வருவதாகவும் தெரிவித்திருப்பதாக டெயிலி நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

# இடைக்காலக் கொடுப்பனவு குறித்து நிதி அமைச்சு-தொழிற்சங்கம் பேச்சுவார்த்தை

### தோல்வியுறின் தொழிற்சங்கப் போராட்டம் என எச்சரிக்கை

இடைக்காலக் கொடுப்பனவாக ரூபா 3000வழங்க வேண்டுமெனக் கோரிக்கை முன்வைத்து நாளை இறுதிப் பேச்சுவார்த்தையில் நிதி அமைச்சருடன் ஈடுபட போவதாக அரசாங்க தொழிற் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது. இப்பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டால். மாபெரும் தொழிற்சங்கப் போராட்டம் அரசாங் கத்திற்கு எதிராக நடத்தப்படும் என அரச தொழிற்சங்க சம்மேளனம் எச்சரித்துள்ளது.

# பொய்க் குற்றச் சாட்டுகளைச் சுமத்தி கட்சியிலிருந்து நீக்க முயற்சி

### ஹெல உறுமய பா.உ.வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

தான் கட்சிக்கு எதிராகச் செயற்படுவதாக குற்றங்கள் சுமத்தி தன்னைக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு கட்சியின் உயர் பீடம் தீர்மானம் எடுத்துள்ளது. இத்தீர்மானத்தை இரத்துச் செய்யவேண்டும் என ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் புஞ்ஞானந்த தேர் உயர் நீதி மன்றத்திற்கு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.கட்சி உயர்பீடம் தம்மீது அவதூறான பொய்க்குற்றச் சாட்டுக்களைச் சுமத்துவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# அரிசி இறக்குமதி செய்யாவிடின் கிலோ 60 ரூபா வரை அதிகரிக்கும்

### அமைச்சர் ஜெயராஜ் பர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

அரிசி இறக்குமதி செய்யாவிட்டால் ஒரு கிலோ அரிசியின் விலை ரூபா 50 தொடக்கம் 60 ரூபாவாக அதிகரிக்குமென அமைச்சர் ஜெயராஜ்பர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.அன்று அரிசியின் விலை அதிகரிப்பை நான் பாராளுமன்றத்தில் வெளியிடும் பொழுது இதை எவரும் கவனத்தில் எடுக்காமையால் அரிசியின் விலை நாட்டில் அதிகரித்துள்ளது. எவர் எதைத் கூறினாலும் இம்மாத இறுதியில் வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்து குறைந்த விலையில் மக்களுக்கு விநியோகிப்பதற்கு எமது அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என அமைச்சர் பர்னாண்டோ கூறியுள்ளார்.

# கடந்த காலத்தில் பொலிசார் சிவில் சேவையை விடுத்து யுத்த நடவடிக்கையிலேயே ஈடுபடுத்தப்பட்டனர்

### வவுனியாவில் சிறில. பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(செட்டிகுளம்)

கடந்த காலத்தில் பொலிசார் சிவில் சேவையை விடுத்து போர் நடவடிக்கையில் ஈடுப்படுத்தப் பட்டனர் எனினும் இன்றய சூழ் நிலையில் பொலிசாருக்கு சிவில் சேவை சம்பந்தமாக பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு சிறிலங்காப் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா வவுனியாவில் தெரிவித்துள்ளார். நேற்று வவுனியாவுந்கு வந்த பொலிஸ்மா அதிபர் வவுனியா பொலிஸ் தலைமைகாரியாளயத்தில் இடம் பெற்ற பொலிசாரின் மரியாதை அணி வகுப்பை ஏற்றுக்கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார் அவர் மேலும் உரையாற்றும் போது பொலிஸ் சேவையில் ரிசேவ் பொலிசாராக பணியாற்றி வருபவர்கள் மிகவிரைவாக நிரந்தரமாக்கப்படவுள்ளனர் பொலிஸ் சேவையில் அவர்கள் நீண்ட நாளாக பணியாற்றி வருபவர்கள் என்பதால் அவர்களை நிரந்தரமாகக்குவதன் மூலம் அவர்களின் சேவையினை அதிகமாகப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் தெரிவித்தார். இதன் பின்னர் வவுனியா பொலிஸ் தலைமையகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வலைபந் தாட்ட மைதானத்தினை திறந்து வைத்தார். இதன் பின்னர் தனது வவுனியா விஜயத்தினை முடித்துக் கொண்டு மன்னர் வீதி வழியான மன்னாருக்கு சென்றார். மன்னாரில் அவர் பொலிஸ் நிலையங்களைப் பார்வையிட்டார். (21,மி)

# உலக வங்கி அதிகாரிகள் குழு மாத இறுதியில் யாழ். விஜயம்

யாழ். குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு உலக வங்கியின் அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் 27ஆம் திகதி யாழ். வருகை தரவுள்ளது.

உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் யாழ். மாவட்டத்தினில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத திட்டங்கள் தொடர்பாக பார்வையிடும் நோக்கிலேயே இக் குழு வருகை தரவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

குறிப்பாக உலக வங்கியின் நிதி உதவியுடன் யாழ். குடாநாட்டின் அமுல்படுத்தப்படும் 125 வீடுகள் அமைப்புத் திட்டத்தை அவர்கள் பார்வையிடவுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை வடகிழக்கு மாவட்டங்கள் தோறும் 100 வீடுகளைக். கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென உலகவங்கி கட்டி வழங்க முன்வந்துள்ளது.

மலசல வசதிகளுடன் கூடிய இக்குடியிருப்பு மனைகள் ஒவ்வொன்றுக்குமென ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவினை ஒதுக்கியுள்ள உலக வங்கி, யாழ். குடாநாட்டில் மேலதிகமாக 25 வீடுகளை அமைத்துக்கொடுக்க முன் வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (27)

## அப்துல் காதரின் விளக்க மறியல் நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டுறவுத்துறை அமைச்சர் ஏ.ஆர்.எம். அப்துல்காதரின் விளக்கமறியல் நீடிக்கப்பட் டுள்ளது.

ஒரு மில்லியன் ரூபாய்கள் சமுர்த்தி நிதியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இவரை இம்மாதம் 29ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்கு மாறு கொழும்பு மாவட்ட பதில் நீதவான் சென்ற புதன் கிழமை உத்தர விட்டுள்ளார்.

# இலங்கை-இந்தியாவுக்கிடையேயான உறவுகள் மேலும் விரிவடைய வேண்டும்

## -புதிய இந்திய உயர்ஸ்தானிகரிடம் சந்திரிகா தெரிவிப்பு

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுகள் மேலும் முன்னேற்றமடைய வேண்டும் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகராகப் பதவி ஏற்றுள்ள நிருபமா ராவ் நேற்று முன்தினம் சனாதிபதியுடன், உத்தியோக பூர்வமாகத் தனது பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர் இடம்பெற்ற சந்திப்பின் போது சனாதிபதி இந்த விருப்பத்தை இந்திய உயர்ஸ்தானிகரிடம் வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் தற்போது உள்ள உறவுகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். இலங்கை விவகாரங்களில் இந்தியா கூடுதல் பங்களிப்பை வழங்க வேண்டும் என தான் எதிர்பார்ப்பதாக சனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் இருதரப்பு இராஜதந்திர உறவுகளை மேலும் வலுவாக்குவது உட்பட இருதரப்பு விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டதாக இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

### சிறீ....

அத்துருகிரிய மிலேனிம் சிற்றியில் மிக இரகசியமான முறையில் இயங்கி வந்த இந்த பிரிவை ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற பொலிஸ் சுற்றிவளைப்பு வெளி உலகிற்கு அம்பலப்படுத்தியது. அதனைத் தொடர்ந்து, கருணா அணி மீது கிழக்கில் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து கொழும்புக்கு அழைத்துவரப்பட்ட கருணா அணியினருக்கு அனைத்து உதவிகளை வழங்கியதாக சந்தேகிக்கப்படும் இந்த சிறப்பு அணியின் செயற்பாடுகள் கொழும்பில் தொடர்ச்சியாக மேற்கொள்ளபட்ட தாக்குதல்களின் மூலம் முடிவுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்க் குழுக்களில் இருந்து விலகி உதிரிகளாக செயற்பட்டவர்களை உள்வாங்கி அவர்களின் முழுமையான பங்களிப்போடு செயற்பட்ட நீண்டதூரம் ஊடுருவித் தாக்கும் அணியின் முக்கியஸ்தர்களான புளொட் மோகன், ரமேஸ் போன்றவர்களும் மேலும் பல இரகசிய செயற்பாட்டாளர்களும் கொலைசெய்யப்பட்டதையடுத்து இந்த அமைப்பில் இருந்த பலர் பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறியுள்தாகத் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் பாதுகாப்புத் தரப்பின் புலனாய்வுப் பிரிவை மறுசீரமைக்க வேண்டிய நிலை தற்போது உருவாகியுள்ளது. இதுவரை இராணுவபுலனாய்வுப் பிரிவு மற்றும் பொலிஸ் புலனாய்வுப்பிரிவு ஆகிய இரு அமைப்புகளாக தனித்து செயற்பட்ட புலனாய்வாளர்களை ஒன்றிணைப்பதன் மூலம் பலமான புலனாய்வு பிரிவை உருவாக்க முடியம் என படைத்தரப்பு கருதுவதாகவும், இதன் அடிப்படையிலேயே புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (32)

### ஈ.பி.டி.பி....

போட்டியிட்ட இவர், அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மட்டுமன்றி, அக் குழுவின் முக்கியஸ்தருமாவார். கடந்த பொதுத் தேர்தல் யாழ். மாவட்ட முடிவுகளுக்கு எதிராக தேர்தல் முடிவுகளைச் செல்லுபடியற்றதாக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் ஈ.பி.டி.பி. சார்பில் இவரே ஆட்சேபனை மனுவைத் தாக்கல் செய்திருந்தார். கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணம் சுன்னாகம் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் பொறுப்பாளாராக இருந்த இவர் 2 மாதங்களுக்கு முன்னதாகவே மீண்டும் புத்தளம் திரும்பியிருந்தார் என்றும் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் புத்தளம் பொலிசாரின் தகவலின்படி துப்பாக்கிச்சூடு நடத்தியோர் பயன்படுத்திய சிவப்பு நிற உந்துருளியில் பதிவு இலக்கம் இல்லை. 9 எம்.எம். ரக கைத் துப்பாக்கி இக் கொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. தலையிலும் உடலிலும் 5 துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன எனத் தெரியவருகிறது. இந்தச் சம்பவத்தையடுத்து புத்தளம் தில்லையடிப் பிரதேசத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு மேலதிக பொலிசாரும் படையினரும் அங்கு காணப்படுகின்றார்கள். (32)

### அச்சுவேலி....

ஜீரணிக்க முடியுமெனவும் அவ்வட்டாரங்கள் வலியுறுத்தியுள்ளன.அத்துடன் பேட்டையினை மீள இயக்க 100 கோடி ரூபா நிதி தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே இரண்டாம் நாளாகதமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மா.வை. சேனாதிராசா தலைமையில் யாழ். செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு அமைப்புகளினதும் தலைவர்கள் இச் சந்திப்பினில் கலந்து கொண்டு தமது தேவைகளை வலியுறுத்திக் கூறியிருந்தனர்.இதேவேளை தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்மரினதும் ஒதுக்கீடான 40 மில்லியன் ரூபாவினில் 30 மில்லியன் ரூபாவை யாழ்.மாவட்டத்திற்கும், 10 மில்லியன் ரூபாவை கிளிநொச்சி மாவட்டத்திற்குமென செலவளிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் மதவழிபாட்டுத் தலங்கள் மற்றும் நிகொட், நியாப், சார்பு திட்டங்கள் அமுல்படுத்தப்படும் துறைசார்ந்தவை தவிர்ந்த மக்களிற்கான அடிப்படை தேவைகளை நிறைவுசெய்யும் வகையிலான திட்டங்களிற்கே நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (27)

## 'பனைச் செல்வம்' நூல் யாழ். இல் நேற்று வெளியீடு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் அவர்களும் தால மூலவள நிறுவன இயக்குனர் வி.ஜி.தங்கவேல் அவர்களும் இணைந்து எழுதிய "பனைச் செல்வம்" எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று மாலை 3.00 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வின் முதன் நிகழ்வாக மங்கல விளக்கினை பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன, யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி சிவபாலன்



ஆகியோர் ஏற்றி வைத்தனர். வரவேற்புரையை அருள் நிகழ்த்தினார். வாழ்த்துரையை பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன், ஆசிரியர் வேலாயுதம், கூட்டுறவு ஆணையாளர் ஐயாத்துரை, டாக்டர் அருளானந்தம், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, ஈழவேந்தன் ஆகியோர் நிகழ்த்தினர். வெளியீட்டுரையை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நிகழ்த்தினார்.இதனைத் தொடர்ந்து நூலின் முதற் பிரதியை பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டு வைக்க வடமாகாண பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தலைவர் தவராசா பெற்றுக் கொண்டார்.அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.மதிப்பிட்டுரையினை இராசதுரை நிகழ்த்தினார். (36)

### வீரவணக்கம்....

இல்லத்தில் வீரவணக்கத்துக்காக வைக்கப்பட்டு, காலை10.00 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துவரப்பட்டு, புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் மக்களின் இறுதி வணக்கத்துக்காக வைக்கப்பட்டு பின் 12.30 மணியளவில் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் நிளைவுக்கல் திரைநீக்கம் செய்துவைக்கப்படும். (08)

### திருமலையில்.....

காப்பு அமைச்சு திருகோணமலையில் இருந்து விடுதலைப்புலிகளின் முகாம்களை அகற்றுமாறு வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.திருகோணமலை துறைமுகத்தை சூழ விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள பதுங்கு குழிகளிலும் காவல் அரண்களிலும் அதி நவீன செய்மதி உணர்திறன் கருவிகளான ராடர்களும் நெடுந்தூர மற்றும் குறுந்தூர கனரகஆயுதங்களும் பொருத்தப்படடுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இதனால் திருகோணமலை துறைமுகத்தின் பாதுகாப்புத் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவதாகவும் படைத்தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச கப்பல்கள் போக்குவரத்தில் ஈடுபடும் பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் அபாயம் இருப்பது எதிர்காலத்தில் சர்வதேசக் கப்பல்களின் வருகையினை குறைத்துவிடலாம் என்ற அச்சமும் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை பாதுகாப்பு படைகளின் கட்டளை அதிகாரியாக பதவியேற்றுள்ள கடற்படைத்தளபதி தயாசந்தகிரி தமது பதவி ஏற்பு நிகழ்வின் போதும் திருகோணமலை துறைமுகத்தின் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

### அரசியல்....

பரப்புரை செய்யப்படுகின்றது தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும், சிங்கள மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்கள். இங்கே தமிழ் மக்கள் உரிமைகளைப் பெறுவது சிங்கள தேசத்திற்கும் சிங்கள மக்களுக்கும் ஒரு நெருக்கடியையும் ஆபத்தையும் அச்சத்தைத்தையும் தோற்றுவிக்கும் என்ற ஒரு அச்ச நிலைமையை தெற்கிலே உருவாக்கி வருகின்றார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் மிகத் தெளிவான நிலைப்பாட்டுடன் இருக்கின்றார்கள். தெற்கில் சிங்கள மக்கள் எவ்வளவு கௌரவமாக உரிமைகளை அனுபவித்து வாழ்கின்றார்களோ அதேபோல் தான் தமிழ் மக்கள் தங்களுடைய தாயகத்தில் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழ வேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டிருக்கிறார்களே தவிர, சிங்கள மக்களுக்கோ அல்லது சிங்கள தேசத்திற்கோ ஒரு அச்சுறுத்தலையோ, நெருக்கடியையோ தோற்றுவிக்கும் நோக்கோடு தமிழீழ விடுதலைப் புலிகளோ அல்லது தமிழ் மக்களோ இந்த உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கவில்லை என்பதை நீங்கள் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். உண்மையில் நீங்கள் பல பிரதேசங்களுக்குச் சென்று பார்த்திருப்பீர்கள். இங்குள்ள உண்மை நிலைப்பாட்டைப் புரிந்திருப்பீர்கள். இன்று இந்த அரசியல் வாதிகள் தங்களுடைய இலாபத்திற்காக தம்முடைய அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்காகவோ அல்லது தக்க வைத்துக் கொள்வதற்காகவோ ஒரு இனவாத பரப்புரைகளைச்செய்து தமிழ் சிங்கள மக்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்து ஒரு யுத்தத்தைத் திணித்து யுத்தமூலமான ஒரு அரசியல் மூலம் இந்தநாட்டிலே பெரும் அழிவுகளையும், அவலங்களையும் ஏற்படுத்தியதைத் தவிர அவர்கள் வேறு ஒன்றும் சாதிக்க வில்லை என்பதை எங்களது இந்தப்பிரதேசங்களுக்குள் சுற்றி வந்தபொழுது தெளிவாகப் புரிந்திருப்பீர்கள் என நினைக்கின்றேன்.உண்மையிலேயே ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை உரிமை இருக்கின்றது. தாங்கள் வாழ்கின்ற சொந்தப்பூமிக்கு அவர்கள் உரித்தானவர்கள். ஆனால் எங்களுடைய மக்களைப் பொறுத்தவரையில் இங்கு நீங்கள் பார்த்திருப்பீர்கள் பல இடங்களிலே எங்கள் மக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டு இராணுவ முகாம்கள், படைமுகாம்கள் அமைக்கப்பட்டு எங்களுடைய மக்கள் அகதிகளாகவும், வெறும்அவல வாழ்க்கையையும் சந்தித்துக்கொண்டிருக்கின்றார்கள். இங்கு மட்டுமல்ல இந்தியாவிற்கு பல ஆயிரக்கணக்கான அகதிகள் வெளியேற்றப்பட்டிருக்கின்றார்கள். பத்து இலட்சம் வரையான மக்கள் சொந்த இடத்திலேயே இருந்து வெளியேறி புலம்பெயர்ந்த நாடுகளிலே வாழ்கின்றார்கள். உள்ளூரிலேயே உறவினர்களுடன் வாழ்கின்ற பல ஆயிரக்கணக்கான மக்கள் இருக்கின்றார்கள். இப்படி பல்வேறு நெருக்கடிகளை எங்களுடைய மக்கள் சந்தித்து வருகின்றார்கள். ஒரு பாரிய மனிதாபிமான நெருக்கடியை நாங்கள் சந்தித்து வருகின்றோம். உண்மையிலேயே இது ஒரு தேவையற்ற திணிப்பு.மக்கள் மீது கொடூரமான நெருக்குவாரத்தைத் திணித்திருக்கிறார்கள். உண்மையிலேயே நீங்கள் சிந்தித்துப்பாருங்கள். நீங்கள் சிங்களப் பகுதிகளிலேயே இருந்து வந்திருக்கின்றீர்கள். தெற்கிலே வாழ்கின்ற கிராமங்களிலோ, உங்களுடையஇடங்களிலோ, உங்களுடைய வீடுகளிலோ உங்களுடைய சொந்த இடங்களில் இருந்து நீங்கள் வெளியேற்றப்பட்டு அகதிகளாக்கப்படுகின்ற பொழுது இருப்பிடங்கள் இல்லாமல் ஆக்கப்படுகின்ற பொழுது நீங்கள் எப்படியான உணர்வைக் கொள்வீர்களோ அந்தநிலைதான் இன்றைக்கு எங்களுடைய தமிழ் மக்களுக்கு. அவர்களுடைய தாயகப் பிரதேசத்திற்கு ஏற்பட்டிருக்கின்றது.இதன் விளைவுதான் .இந்த உரிமைப்போராட்டத்தின் வளர்ச்சியும் போக்கும்.

நான் ஒன்றும் புதுமையாகவோ அல்லது இன்னோர் இனத்திற்கு இன்னோர் தேசத்திற்கு ஆபத்தை, ஒரு நெருக்கடியைத் தோற்றுவிக்கும் நோக்குடனே எங்களுடைய உரிமைக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. நாங்கள் காலம் காலமாக பாரம்பரியமாக வாழந்த எங்களுடைய சொந்த மண்ணிலேயே நாங்கள் வாழ்வதற்கான வாழ்வுரிமையைத்தான் கேட்டு நிற்கின்றோம். இந்த மண்ணிலே சுகந்திரமாக,கௌரவமாக அனைத்து உரிமைகளையும்அனுபவிக்கக் கூடிய ஒரு மக்களாக வாழ வேண்டும் என்ற ஒரு குறிக்கோளோடுதான் எங்களுடைய உரிமைக் கோரிக்கையை நாங்கள் முன்வைத்தோம். ஆனால் அது இராணுவ ரீதியாக வந்து நசுக்கப்பட்டு படையெடுப்புக்களையும், யுத்தத்தையும், எங்கள் மீது திணித்தபொழுதுதான் அது ஒரு பெரும்யுத்தமாகவும் போராட்டமாகவும் வெடித்தது. எங்களுடைய தாயகப்பிரதேசத்திலே எங்களுடைய மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொான்றொழிக்கப்பட்டுள்ளார்கள். அது இன்றும் வேதனையான விடயமாக இருந்தாலும் அதேநேரம் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் உள்ள அப்பாவி இளைஞர்களைக் கொண்டுவந்து யுத்தம் என்ற போர்வையிலேயே இந்தப்பிரதேசம் முழுவதும் ஆயிரக்கணக்கில் அவர்களையும் பலிகொடுத்து, இங்கு ஒரு தேவையற்ற யுத்தத்தை அப்பாவி மக்கள் மீது திணித்து, அந்த மக்களையும் கொன்றொழித்து அரசியல்வாதிகள் தங்களுடைய இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்கு இதைப் பயன்படுத்தினார்களே தவிர நிச்சமாக இதனால் இவர்கள் ஒரு பயனையும அடையவில்லை என்பதுதான் யதார்த்தமானதும், உண்மையானதும் என்பதை நீங்கள் வந்து பார்த்த இடங்கள் மூலம் புரிந்திருப்பீர்கள்.

அமைதி வழியில், சமாதான வழியில் இரண்டு தரப்பும் வீணாக உயிரிழப்பைச் சந்திக்காது பேசி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற நோக்கிலே ஒரு தலைப்பட்சமாக யுத்தநிறுத்தம் ஒன்றைப் பிரகடனப்படுத்தி தெற்கிலே உள்ள தலைவர்களுடன் பேசி பிரச்சினையைத் தீருங்கள் நீங்கள் வீணாக இந்த உயிரழிவுகளை இரண்டு தரப்புகளிடையேயும் ஏற்படுத்த முயலாதீர்கள் என்ற நோக்கத்தோடு பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரு நேசக்கரத்தை எமது தேசியத்தலைவர் நீட்டியிருந்தார்.

உண்மையிலேயே ஒரு தூய நோக்குடனும், உண்மையான நோக்கத்தோடும் எங்களுடைய தேசியத்தலைவர் இந்தத் தீர்மானத்தை எடுத்து சிங்கள தேசத்திற்கும். சிங்கள மக்களுக்கும் எங்களுடைய நேசக்கரத்தை நீட்டியுள்ளார்.அந்தவகையில் அங்கே உள்ள அரசியல்வாதிகள், அரசியல் சூழ்நிலைகளைச் சீர்குலைப்பதுடன், மோசமான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கின்றார்களே தவிர இந்த நாட்டிலே அழிவை ஏற்படுத்துகின்ற தேசிய இன நெருக்கடிக்கு தீர்வுகாணுகின்ற உண்மையான நோக்கத்தோடு அவர்கள் இல்லை என்பதை கடந்த கால நிகழ்வுகள் எங்கள் எல்லோருக்கும் உணர்த்தியுள்ளன. (தீ.லோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.